வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 05.05.2021 புதன்கிழமை | இதழ் : 155 | பக்கங்கள் : 16




ஊடகவியலாளர்கள் மீது வன்முறை

# சட்டத்தின் முன் குற்றவாளிகள் நிச்சயம் நிறுத்தப்பட வேண்டும்

சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்து

AMNESTY INTERNATIONAL

கொழும்பு,மே 05

ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. ஊடக வியலாளர்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் தொடர் பில் முழுமையான விசாரணைகளை நடத்தி, குற்ற வாளிகளைச் சட்டத்தின் முன் நிச்சயம் நிறுத்துவதற்கு

15

## கொரோனா நிலை குறித்து இன்று முழு நாள் விவாதம்

கொழும்பு, மே 05

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழு சட்டமூலம் மீதான விவாதத்தை இன்று புதன் கிழமை நடத்தி வாக்கெடுப்புக்கு விடுவதென அரசினால்

15

## நாட்டை முடக்க முடியாது தடுப்பூசி ஏற்றுவதே தீர்வு

அமைச்சர் பவித்ரா திட்டவட்டம்

கொழும்பு, மே 05

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் நாட் டினை முடக்க முடியாது. தடுப்பூசிகளை ஏற்றுவதன்

15

யாழில் புதிதாக வெடித்தது

# கொடிகாமம் கொத்தணி

## 21 பேருக்கு தொற்றுறுதி; இரு பகுதிகள் முடக்கம்

யாழ்ப்பாணம், மே 05

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்று தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. இந்நிலையில் கொடிகாமம் சந்தைக் கொத்தணி புதிதாக உருவாகியுள்ளது. இதில், நேற்று 21 பேர் தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

15

## 64 வீத மாணவர்கள் பல்கலைக்கு தெரிவு

கொழும்பு,மே 05


நேற்று வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறு பேறுகளின் அடிப்படையில் 64.39 சதவீதமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

மேலும், பரீட்சை மீள் பரீசிலனைக்கான விண்ணப் பங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் எனவும் தெரி

15

கணிதப்பிரிவில் தேசிய மட்டத்தில்

## சாவகச்சேரி இந்து மாணவன் முதலிடம்



யாழ்ப்பாணம்,மே 05

2020 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் தனராஜ் சுந்தர்பவன் கணிதப்பிரிவில் தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

இவரது இசட் புள்ளி 2.9422 ஆகும். இவர் தேசிய நிலையி

15

## இரண்டாம் கட்டமாக வழங்க தேவையான ஆறு இலட்சம் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு

அரசின் தவறு காரணமல்ல என்கிறார் அமைச்சர் சுதர்ஷினி



கொழும்பு, மே 05

6 இலட்சம் கொரோனா தடுப் பூசிகளுக்கு தட்டுப்பாடு இருப் பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின் றோம். அதனை மறைப்பதற்கு ஒன்றுமில்லை. அரசாங்கத்தின் தவறால் அது இடம்பெற்ற தொன்று அல்ல. எதிர்பார்க்காத வகையில் நடந்ததொன்று என ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்

15

## நாட்டை முடக்குவதை அரசு நிராகரிக்காது!

அரசின் பேச்சாளர் கெஹலிய அறிவிப்பு

கொழும்பு, மே 05

நாட்டில் கொரோனா தொற்று அபாயம் மேலும் அதிகரிக்குமானால் நாட்டை முடக்கும் தீர்மானத்தை அர சாங்கம் நிராகரிக்காது என்று அமைச்சரவை இணைப் பேச் சாளர் - அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத் தில் நேற்று நடந்த செய்தியா ளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறி னார்.

15

## 75 இலட்சம் தடுப்பூசிகளை பெற ரஷ்யாவுடன் உடன்படிக்கை



இராஜாங்க அமைச்சர் தயாசிறி தகவல்

கொழும்பு, மே 05

ஏழரை மில்லியன் கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளும் உடன்படிக்கை ரஷ்யாவுக்கும் இலங்கைக்கு மிடையில் செய்துகொள்ளப்பட்டுள்ளது. அதே வேளை ஆறு இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள்

15

கடல்வழியாக மன்னாருக்குள் நுழைந்த



## II இந்திய மீன்பிடி படகுகளை தடுத்து நிறுத்தியது கடற்படை

மன்னார், மே 05

சட்டவிரோதமாக யாரும் இலங்கை கடலுக்குள் நுழை வதைத் தடுக்க கடற்படை வடக்கு கடல் பகுதியில் சிறப்பு ரோந்துப் பணிகள்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

நேற்றைய தினம் இந்தப் பத்தியில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தோம்.

அந்தப் பத்தியை நாங்கள் எழுதிக்கொண்டிருந்த, அதே வேளையில் மட்டக்களப்பில் வைத்து கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரன் மதியாபரணம் அவர்கள் நல்லதொரு செய்தியை தெரிவித்திருக்கின்றார்.

நடைபெறவிருக்கும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இணைந்து தேர்தலில் போட்டியிடுவது பற்றி பேச்சு நடத்திக்கொண்டிருப்பதாக சுமந்திரன், தான் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கின்றார்.

கிழக்கு மாகாண சபையில் தமிழர் ஒருவர் முதலமைச்சராக வரவேண்டும் என்றால், முஸ்லிம்களுடைய ஆதரவையோ அல்லது அங்குள்ள சிங்கள பிரதிநிதிகளுடைய ஆதரவோ இல்லாமல் அது சாத்தியமாகாது.

அதுபோலவே, முஸ்லிம்கள் முதலமைச்சராவது என்றாலும், தமிழர்களுடைய ஆதரவோ அல்லது சிங்களவர்களுடைய ஆதரவோ இல்லாமல் அது சாத்தியமாகாது.

இதனால்தான் கடந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களை தம்வசம் வைத்திருந்தபோதிலும் தாம் ஆட்சி அமைக்காமல், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் முதலமைச்சராவதற்கு தனது ஆதரவை வழங்கியதுடன், இரண்டு அமைச்சுக்களை பெற்று ஆட்சியில் பங்கு கொண்டது.

முஸ்லிம் காங்கிரஸையோ அல்லது ரிஷாத் பதியுதீன் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரஸையோ பொறுத்தவரை, அவர்கள் இருவரும் ஒருவரோடு ஒருவர் அரசியல் ரீதியாக முட்டி மோதினாலும் இன ரீதியான விடயங்களில் இணைந்து பயணிக்க என்றுமே பின்நின்றதில்லை.

அதுபோலவே தமது மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்றால் எந்த அரசுடனும் அவர்கள் சேர்ந்து பயணிக்கவும் பின்நிற்பதில்லை.

முஸ்லிம்களுடன் இணைந்து தமிழர்கள் பயணிப்பது என்பது நல்ல முடிவுதான்.

ஆனால், அது குறித்து பேச்சு நடத்தும்போதே வழக்கம் போல சுமந்திரன் அவர்கள் இதனை அவசரம் அவசரமாக பகிரங்கப்படுத்த வேண்டியதன் தேவை என்ன என்பது தெரியவில்லை. இத்தகைய ஒரு முடிவு கூட்டமைப்பாக எடுக்கப்பட்டதாகவும் தெரியவில்லை.

சுமந்திரனின் இந்த அறிவிப்புக் குறித்து அன்றைய தினமே கருத்துத் தெரிவித்த ரெலோ பொதுச்செயலாளரும் எம்.பி.யுமான கோவிந்தம் கருணாகரன், கூட்டமைப்பு இப்படியொரு பேச்சில் ஈடுபடவில்லை என்று தெரிவித்திருந்தார்.

கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான புளொட் தலைவருடன் பேசிய ஊர்க்குருவிக்கு அவரும் இப்படியொரு விடயம் நடப்பது தமக்குத் தெரியாது என்றார்.

ஆக, சுமந்திரன் இப்போதும் தான் மட்டுமே முடிவெடுக்கின்ற தலைவர் என்ற சிந்தனையுடன் செயல்படுவதையே அவதானிக்க முடிகின்றது. முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிடுவது என்பதோ அல்லது இணைந்து ஆட்சியமைப்பது என்பதோ தனி ஒருவர் முடிவெடுக்கின்ற விடயமல்ல.

தான் முடிவெடுத்தால் அதனைக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் அவர் செய்வதோ அல்லது நான் முடிவெடுத்துவிட்டேன் எல்லோரும் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும் என்று நினைப்பதோ கட்சியை மீண்டும் ஒரே திசையில் செல்வதற்கே (தோல்வியை நோக்கி) வழி வகுக்கும்.

முஸ்லிம் காங்கிரஸுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிடுவது என்பது, அங்குள்ள மக்களின் உணர்வுகளுடன் சம்பந்தப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டமைப்பின் பல்வேறு தரப்பினருடனும் கூடிப்பேசி முடிவெடுக்க வேண்டிய விடயம். இவ்வாறு கூட்டமைப்பு முடிவெடுக்காத ஒரு விடயத்தை தன்னிச்சையாக செய்ய நினைப்பதோ அல்லது அதனை பேச்சு இன்னமும் முடிவடையாத நிலையில் அவசரம் அவசரமாக அறிவிப்பு செய்வதோ ஏன் என்பது அவருக்கு மட்டுமே தெரிந்தது.

தமிழர்களும் முஸ்லிம்களும் எப்போதுமே ஒன்றாக இணைந்துவிடக்கூடாது என்பதில் பெரும்பான்மை கட்சிகள், முக்கியமாக ஆட்சியிலுள்ளவர்கள் எப்போதுமே கவனமாக இருந்து வந்துள்ளனர்.

சிறுபான்மை இனங்கள் இவ்வாறு இணைவதை பெரும்பான்மை இனத்தவர் எப்போதுமே ரசிப்பதில்லை.

இந்நிலையில், பேச்சுவார்த்தை நடப்பது தொடர்பாக பங்காளிக் கட்சிகளுக்கே தெரியாத போது, அதனை அவசரம் அவசரமாக பகிரங்கப்படுத்துவது யாரை திருப்திப்படுத்த என்ற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

**- ஊர்க்குருவி.**

# உண்மையை உரைப்பதால் பலருக்கு என்னை பிடிக்காது

### சுமந்திரன் எம்.பி. சொல்கிறார்




**களுவாஞ்சிக்குடி,மே05**

**எந்த இடத்திலும் எந்தப் பொய்யையும் ஒரு தடவை கூட நான் சொன்னது கிடையாது. மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறுவதால் பலருக்கு என்னைப் பிடிக்காமல் இருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி பகுதியில் தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

சட்டத்தரணி தொழிலிலேயே பொய் சொல்லாதவன் என்று பெயர் எடுத்தவன் நான். ஆகவே, அரசியலில் பொய் சொல்ல வேண்டிய எந்தத் தேவையும் எனக்குக் கிடையாது. குறிப்பாக எதிரணியினர் இவ்வாறு கூறித் திரிகின்றனர். ஜெனிவா தொடர்பில் பல இடங்களில் பல விளக்கங்களை கொடுத்திருக்கின்றேன். அதில் கேட்ட கேள்வி அனைத்துக்கும் பதில் கூறியுள்ளேன். ஆகவே, எந்த இடத்திலும் எந்தப் பொய்யையும் ஒரு தடவை கூட நான் சொன்னது கிடையாது.

மக்களுக்கு உண்மை நிலைமையை கூறுவது என்பதால் பலருக்கு என்னைப் பிடிக்காமல் இருக்கின்றது. ஏனென்றால் சந்திரனை கொண்டுவருவோம், சூரியனை கொண்டுவருவோம் என மக்களுக்கு அவர்கள் தெரிவித்துவருகின்றனர். ஆனால், நான் அவ்வாறு இல்லை. இப்படிதான் என தெளிவு படுத்துகின்றேன். இவ்விடயம் தான் அவர்களுக்கு கசக்கின்றது எனக் குறிப்பிட்டார். (எ)

## ஒரு வாரத்தில் மாத்திரம் 11,000 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே 05

இலங்கையில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் 11 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி முதல் நாட்டில் நாளாந்தம் கொரோனா தொற்று கண்டறியப்படுவோரின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு மேல் பதிவாகியுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த காலப்பகுதியில் 54 பேர் கொரோனா தொற்றினால் மரணித்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கையில் இதுவரை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 676 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில், 98 ஆயிரத்து 209 பேர் குணமடைந்துள்ளதுடன், 709 பேர் மரணித்துள்ள நிலையில் இன்னும் 14 ஆயிரத்து 771 தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றினால் மரணித்தவர்களுள் 449 பேர் ஆண்கள் எனவும் 260 பேர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், உயிரிழந்தவர்களுள் 70 வீதமானவர்கள் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலா விடுதிகள், சுற்றுலா முகாம்கள் தற்காலிகமாக மூடல்

கொழும்பு,மே 05

வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழுள்ள அனைத்து சுற்றுலா விடுதிகள் மற்றும் சுற்றுலா முகாம்கள் தற்காலிகமாக மூடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் இந்தப் பகுதிகள் மீள அறிவிக்கும் வரையில் மூடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விதமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு,மே 05

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக உடன் அமுலுக்கு வரும் வகையில் நாட்டின் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன என கொரோனா தடுப்பு தேசிய செயல்பாட்டு மையத்தின் தலைவர், இராணுவத் தளபதி சவேந்ர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு மொரட்டுமுல்ல பொலிஸ் பிரிவு - வில்லோர தோட்டம் கிராம சேவகர் பிரிவு,ஹற்றன் பொலிஸ் பிரிவு - போடைஸ் தோட்டம் கிராம சேவகர் பிரிவு, கடவத்தை பொலிஸ் பிரிவு - எல்தெனிய தேவாலய வீதி மற்றும் ரணவிரு தர்மசிறி மாவத்தை முதலான கிராம சேவகர் பிரிவுகள், இரத்தினபுரி பொலிஸ் பிரிவு - கங்குல்விட்டி கிராம சேவகர் பிரிவு, இறக்குவானை பொலிஸ் பிரிவு - பொத்துபிட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவு, கலவான பொலிஸ் பிரிவு -ஹப்புகொட கிராம சேவகர் பிரிவு, தொடாங்கொடை பொலிஸ் பிரிவு - போம்புவல கிராம சேவகர் பிரிவு என்பன தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (எ)

கல்வி tv CHANNEL-1

காலை
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்
பகல்
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
05.05.2021 புதன்கிழமை
சார்வரி, சித்திரை 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# அரசியல் மோதல்களை கைவிடுவதற்கான வேளை நெருங்கியதா?

அரசியல் ரீதியான மோதலை தாங்கள் கைவிடுவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார். இரண்டு கோடி மக்கள் ஆபத்தில் சிக்கியிருக்கின்றபோது, அரசியல் மோதல்களை கைவிட்டு, அனைவரும் மக்களை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். இலங்கைக்கு உதவு மாறு, வெளிநாட்டு தூதரகங்களுடன் பேசியிருப்பதாகவும் சஜித் பிரேம தாஸ தெரிவித்திருக்கின்றார். சில தினங்களுக்கு முன்னர்தான் சஜித் பிரேமதாஸ, ஐரோப்பிய இராஜதந்திரிகளை சந்தித்து, அரசாங்கம் சர்வாதிகார போக்கில் நடந்துகொள்வதாகவும், சிலரது பிரஜாவுரிமையை பறிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

இலங்கையின் அரசியலைப் பொறுத்தவரையில், ஒரு கட்சி ஆதரிப்பதை, பிரேரிப்பதை, எதிர்கட்சி எதிர்ப்பதும், அரசாங்கத்தை பல வீனப்படுத்த முற்படுவதுமே வரலாறு. இது பொதுவாக ஜனநாயக அரசியல் கலாசாரமாகவும் இருக்கின்றது. இது, ஜனநாயகத்திற்கு அவசியமான ஒன்றுதான். ஆனால், இலங்கையை பொறுத்தவரையில் ஆளும் தரப்பை பலவீனப்படுத்தவேண்டுமென்னும் நோக்கிலேயே பெரும்பாலான விடயங்கள் இடம்பெறுவதுண்டு. இதில் பிரதான கட்சிகள் இரண்டும் விதிவிலக்கல்ல. ஆனால், இதுவரை இலங்கை எதிர்கொண்ட நெருக்கடிகளுக்கும், தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிகளுக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடுண்டு. இவ் வாறானதொரு சூழலிலேயே சஜித் பிரேமதாஸவின் மேற்படி அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது.

உண்மையில், தற்போது நாடு எதிர்கொண்டிருக்கின்ற நெருக்கடி நிலையானது, மனிதாபிமான நோக்கில் மட்டுமே நோக்கவேண் டியதாகும். இதனை அரசியல்மயப்படுத்துவது தவறான ஒன்று. அவ் வாறு செய்வதானது, ஒரு மக்கள் விரோத செயலாகவே அமையும். அதேவேளை, இலங்கையில் புரையோடிப்போயுள்ள இன முரண் பாடுகளின் வழியாகவும் இந்த விடயங்களை நோக்கமுடியாது - நோக்கவும் கூடாது. ஏனெனில், கொரோனா இலங்கை மக்களையே பாதிக்கின்றது. உண்மையில், இது நல்லிணகத்துடன் பணியாற்ற வேண்டிய காலம். இந்தக் காலத்தை அனைத்து அரசியல் தரப்பினரும் சரியாக பயன்படுத்திக்கொண்டால், எதிர்காலத்தில், நல்லிணக்கத் திற்கான ஒரு சிறந்த அடித்தளமாகக்கூட இதனை பயன்படுத்திக் கொள்ளலாம்.

கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தின மும் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. மரணங்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கின்றது. உடனடி அயல்நாடான இந்திய நிலை மைகள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. அவ்வாறானதொரு நிலை மையை இலங்கையால் கற்பனைகூட செய்துபார்க்க முடியாது. எனவே, ஏதோவொரு வகையில், இலங்கை ஆபத்தான கட்டத்தை நோக்கி நகராமல் தடுக்கவேண்டியது அனைவரதும் கடமையாகும்.

இவ்வாறானதோர் இக்கட்டான சூழலில், அரசியல் முரண்பாடுகளை புறம்தள்ளி, மக்களை முதன்மைப்படுத்தி செயற்படுவதே அனைவரதும் கடமையாக இருக்கவேண்டும். அந்த வகையில், சஜித் பிரேமதாஸ வின் அறிவிப்பை, எதிர்தரப்பில் இருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் வாதிகளும் கருத்தில் கொள்ளலாம். இந்த நெருக்கடி நிலையிலிருந்து மீண்டெழுவதற்கான பொறிமுறை தொடர்பில் சிந்திப்பதற்கான பொறுப்பு தமிழர் தரப்புக்களுக்கும் உண்டு.

# இலங்கை தமிழர் பிரச்னை
## முக்கியத்துவம் பெற்றிராத தமிழக தேர்தல்!

- அலசுவது **இராஜதந்திரி** -



உதயநிதி ஸ்டாலினை ஒரு வாரிசாக தமக்குப் பின்னர் உருவாக்கிய நிலையில், ‘தளபதி’ என்று தமது கட்சித் தொண்டர்களால் அழைக்கப்பட்ட திராவிட முன்னேற்ற கழக தலைவர் மு. க. ஸ்டாலின் தமிழ்நாடு மாநில முதலமைச்சராக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (07ஆம் திகதி) பதவியேற்கிறார். தமிழ்நாடு மாநில அரசியலை எடுத்துப் பார்க்கும்போது, தமிழகத்தின் முதலாவது முதலமைச்சர் மூதறிஞர் ராஜாஜி முதல் ஜெயலலிதா வரை பெரிதும் கலையுணர்வுடையவர்களே தமிழகத்துக்கு சிறப்புச் சேர்த்ததை அவதானிக்க முடியும்.

**அண்ணா - காமராஜர்**

பேரறிஞர் அண்ணாதுரையின் பரந்த அறிவு தமிழ் கூறும் நல்லுலகு மாத்திரமல்ல, முழு இந்தியாவுமே வியந்து போற்றுவதாக இருந்தது. இதுதவிர, அனைத்து இந்தியர்களாலும். ஓர் அரசரை உருவாக்கியவர், (King Maker) என்ற மதிப்போடு, இந்தியாவின் முதன்மைக் கட்சியான காங்கிரஸ் கட்சியின் தலைமையை இந்திரா காந்திக்காக விட்டுக் கொடுத்தவரே கர்மவீரர் காமராஜர்.

இவ்வகையில், தமிழக அரசியலில் ஒரு சிறந்த தமிழறிஞராக இருந்து தமிழிலே தொல்காப்பியத்துக்கு உரை எழுதியது முதல், மாபெரும் இலக்கிய படைப்புகளையெல்லாம் தந்ததோடு தமது எழுத்தாற்றலாலும் பேச்சாற்றலாலும் தமிழ்கூறும் நல்லுலகு முழுவதிலும் தனக்கென ஒரு முத்திரை பதித்த வராக கலைஞர் மு. கருணாநிதி விளங்கியிருந்தார்.

‘ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பது போல, கலைஞர் கருணாநிதி எவ்வளவு தூரம் ஒரு மாபெரும் கலைஞர் என்பதற்கு, நடிகர் திலகம் சிவாஜி கணேசனை திரையுலகுக்கு முதல் முறையாக அறிமுகப் படுத்தியமையே ஒரு நல்ல எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

கலைஞர் கருணாநிதியின் திரைக்கதை வசனத்தில் உருவான ‘பராசக்தி’ திரைப்படம் மூலமே சிவாஜி கணேசன் முதல் தடவையாக தமிழ் திரையுலகத்துக்கு அறிமுகமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஜெயலலிதா - கருணாநிதி**

ஜெயலலிதா ஆட்சியில் கருணாநிதி அரசியல் ரீதியாக பெரிதும் பழிவாங்கப்பட்டிருந்தார். ஆயினும், கருணாநிதியோ அல்லது அவரது புதல்வர் மு. க. ஸ்டாலினோ எவ்வகையிலும் உறுதி தளராதவர்களாக, அரசியலில் ஏற்பட்ட சவால்களையெல்லாம் சந்தித்து வந்திருந்தனர். இலங்கைத் தமிழர் பிரச்னை தீவிரவாதமாக மாற்றமடைந்து தமிழகத்தில் வடக்கு - கிழக்கின் அப்பாவி தமிழர்கள் மட்டுமல்ல. ஆயுதப்போராளிகளும் தஞ்சமடைந்தபோது, அவர்களுக்குரிய பாதுகாப்பை வழங்குவதில் கருணாநிதி மட்டுமல்ல. அண்ணா திராவிட முன்னேற்ற கழக ஸ்தாபகரான மறைந்த முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனும் முக்கியமான பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

இருந்தபோதிலும், காலஞ்சென்ற இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலைசெய்யப்பட்டதையடுத்து, தமிழகத்தில் இலங்கைத் தமிழர் மீதான அனுதாப அலையில் ஒரு தளர்வு இருந்ததை அவதானிக்க முடிந்தது.

**புலிகள் மீது தடை**


ராஜீவ்காந்தி கொலையுண்டதையடுத்து தமிழகத்தில் மட்டுமல்ல. முழு இந்தியாவிலுமே இலங்கைத் தமிழர் மீதான பார்வையில் மாற்றமேற்படத் தொடங்கியதுடன், முழு இந்தியாவிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், தமிழக முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதி, இலங்கையில் 2009ஆம் ஆண்டு மே மாதம் இறுதிக்கட்ட போர் மூர்க்கமடைந்தபோது அதனை உடனடியாக நிறுத்தும்படி மெரீனா கடற்கரையில் உண்ணாவிரதமிருந்து, அப்பாவித் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

எது எப்படியிருந்தபோதிலும், இத் தடவை தமிழ்நாடு மாநில தேர்தலில் கடந்த காலங்களில் போன்று இலங்கைத் தமிழர் பிரச்னை முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. திராவிட முன்னனேற்ற கழகம் மற்றும் அண்ணா திராவிட முன்னனேற்ற கழகம் ஆகியவை தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் மேலெழுந்தவாரியாக இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு ஒரு தீர்வு வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தனரே தவிர, தமிழகத்தில் இத்தடவை தேர்தல் மேடைகளில் இலங்கைப் பிரச்னை ஒரு முக்கிய விடயமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

இதுதவிர, இலங்கைத் தமிழர் பிரச்னையை முன்னிறுத்தி அரசியலில் ஈடுபட்ட நாம் தமிழர் கட்சியைச்சேர்ந்த சீமான், தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் தோல்வி கண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, எதிர்கால தமிழக அரசியலைப் பொறுத்தவரை, இலங்கையின் வடக்கு-கிழக்கு தமிழர் பிரச்னை எவ்வாறு கையாளப்படுமென்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.தமிழகமாக இருக்கலாம், அல்லது இந்திய மத்திய அரசாக இருக்கலாம், இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை மையப்படுத்தியதாகவே அவற்றின் இலங்கை வடக்கு - கிழக்கு தமிழர் குறித்த அணுகுமுறை காணப்படுமென்று கருதலாம்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**மே - 5 புதன்கிழமை**
பிலவ வருடம் - சித்திரை - 22
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 1.30
திதி : நவமி




**மேடம்**
கவரும் தன்மை அதிகரிப்பதால் பணியிடத்தில் நற்பெயர் கிடைக்கும். சாத்தியம் இல்லாத விஷயம் ஒன்றைச் செய்து முடித்து மகிழ்வீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் பெரிய லாபம் காண முடியும்.

**இடபம்**
பொருள் சேர்க்கை ஏற்படும். பங்குச் சந்தையில் லாபம் வரும். நல்லவர்களால் குடும்பத்திற்கு உதவியும், நன்மையும் கிடைக்கும். நேற்றிருந்த மன அழுத்தம் முழுக்கத் தீரும். நிம்மதி ஏற்படும்.

**மிதுனம்**
கடந்த நாட்களைவிட் இன்று வியாபாரத்தில் லாபம் உயரும். அதிகாரிகளுடன் அனுசரித்து போக வேண்டியது அவசியம். கடுமையான சொற்களைப் பயன்படுத்தி யாரையும் பகைக்க வேண்டாம்.

**கடகம்**
உங்கள் பேச்சிலும், செயலிலும் விவேகம் அதிகரிக்கும். மனதில் புது தெம்பும், உற்சாகமும் ஏற்படும். சில முயற்சிகள் கைகூடும். நிம்மதியான நாள். உடன்பிறப்பு மூலம் சிறு ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்**
ஆன்மிக பணிகளில் நாட்டம் உண்டாகும். மனதில் தன்னம்பிக்கை கூடும். மதியத்திற்கு பிறகு நீங்கள் எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். மனதில் கருணை உருவாகி நற்செயல்கள் செய்வீர்கள்.

**கன்னி**
உடல் ஆரோக்கியத்தில் சிறிய தொந்தரவு வரலாம். இன்று சிறிய அளவில் செலவு ஒன்று ஏற்பட வாய்ப்பு உண்டு.வாழ்க்கைத்துணையின் ஆலோசனை உதவியாக இருக்கும்.

**துலாம்**
நெருங்கிய சொந்தங்களால் நல்ல பலன்கள் கிடைக்கும். கணவன் மனைவி இருவரும் வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். நண்பர்களை சந்திப்பீர்கள். வெளிநாடு பயணம் செல்ல ஏற்பாடாகும்.

**விருட்சிகம்**
நல்ல விஷயங்களிலும், பொதுப் பணியிலும் ஈடுபாடு உண்டாகும். குடும்பத்தில் வரவேற்கத்தக்க மாற்றமும், முன்னேற்றமும் வரும். நட்பு வட்டத்தில் உங்களின் கவுரவம் உயரும். சுபச்செலவுகள் கூடும்.

**தனுசு**
இளைஞர்கள் நிறைய புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். புதிய முயற்சிகளில் எதிர்பார்த்த பலன் சற்றுக் குறைவாகவே கிடைக்கும். எந்த விஷ யத்திலும் அவசரம் காட்டாமல் பொறுமையாக இருக்கவும்.

**மகரம்**
உங்களின் பெருமையை அறிந்து சிலர் உங்களை நாடி வருவர். அடுத்தவர்களுக்காக உதவி செய்வதால் உற்சாகம் அதிகரிக்கும். வாழ்க்கைத் தரம் உயரும். கணவன் மனைவிக்குள் புரிதல் அதிகமாகும்.

**கும்பம்**
தேவையற்ற பயங்களை தவிர்ப்பதால் நிம்மதி அதிகரிக்கும். உறவினர்களால் நிம்மதி கிடைக்கும். உங்களின் ரசனை அதிகரிக்கும். கடன் வாங்கும் எண்ணத்தை கை விடுவது மிகவும் நல்லது.

**மீனம்**
வாகன யோகம் உண்டு. கலைகளில் ஆர்வம் கொள்வீர்கள். மருத்துவ செலவு ஏற்படலாம். வழக்குகளைத் தள்ளிவைப்பது நல்லது. தாயாருக்கு நன்மை நடக்கும். உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும்.

# தமிழகம் முழுவதும் நாளை முதல் புதிய கட்டுப்பாடுகள் நடைமுறை

சென்னை, மே. 05

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நாளை வியாழக்கிழமை முதல் புதிய கட்டுப்பாடுகள் அமுலாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் புதிய முதல்வராகப் பொறுப்பேற்கவுள்ள மு.க. ஸ்டாலினை நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை மாநில சுகாதாரத்துறைச் செயலர், தலைமைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர் புதிய கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டன.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பெப்ரவரி மாத இறுதியில் தமிழகத்தில் ஒரு நாளைக்கு 450 புதிய நோயாளிகள் கண்டறியப்பட்ட நிலை மாறி தற்போது ஒரு நாளைக்கு 20,000 -க்கும் மேல் புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டு வருகின்றனர். 23-க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் நோய்த் தொற்று 10 வீதத்துக்கும் மேல் உள்ளது.

மே 3-ஆம் திகதி நிலவரப்படி தமிழ்நாட்டில் நோய்த் தொற்று உள்ளவர்களின் எண்ணிக்கை 1.23 இலட்சமாக உயர்ந்துள்ளது. தமிழக நிலவரத்தை கடந்த 30ஆம் திகதி ஆய்வுசெய்தபோது



தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் நோய்த் தொற்று விகிதம் 10 வீதத்திற்கு மேல் உள்ளது. பல மாவட்டங்களில் ஒக்ஸிஜன் அல்லது தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகள் 60 வீதத்துக்கு மேல் நிரம்பியுள்ளன.

இந்நிலையில் நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த மே 6-ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் 20ஆம் தேதி அதிகாலை 4 மணி வரை புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அதன் பிரகாரம் பின்வரும் கட்டுப்பாடுகள் அமுலுக்கு வருகின்றன.

1. அனைத்து அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் 50 வீத ஊழியர்களுடன் மட்டும் இயங்கலாம்.

2. அனைத்து பொதுப் போக்குவரத்து வசதிகளிலும் 50 வீத இருக்கைகளில் மட்டும் பொதுமக்கள் அமர்ந்து பயணம் செய்யலாம்.

3. வணிக வளாகங்களில் இயங்கும் பலசரக்குக் கடைகள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களுக்கு அனுமதி இல்லை. பிற பலசரக்குக் கடைகள் பகல் 12 மணி வரை மட்டுமே இயங்கலாம். ஒரே சமயத்தில் மொத்த திறனில் 50 வீத வாடிக்கையாளர்கள் மட்டுமே கடைக்குள் இருக்கலாம். இந்தக் கடைகள் தவிர, மற்ற கடைகள் இயங்குவதற்கு அனுமதி இல்லை. மருந்தகங்கள், பால் விநியோகம் போன்றவை வழக்கம் போல செயல்படலாம்.


4. அனைத்து உணவகங்களிலும் பொதிகள் சேவைகள் மட்டும் அனுமதிக்கப்படும். தேநீர் கடைகள் 12 மணிவரை செயல்படலாம். உணவகங்கள், தேநீர் கடைகளில் இருந்து உண்பதற்கு அனுமதி இல்லை.

விடுதிகளில் தங்கியிருப்பவர்களுக்கு அவர்கள் தங்கியுள்ள அறைகளிலேயே உணவு வழங்க வேண்டும்.

5. எல்லாவிதமான சமூக, அரசியல், பொழுதுபோக்கு, கலாசார நிகழ்ச்சிகளையும் நடத்த தடை விதிக்கப்படுகிறது. திரையரங்குகள் செயற்பட அனுமதி இல்லை.

6. இறுதிச் சடங்குகள், ஊர்வலங்களில் 20 பேருக்கு மேல் அனுமதி இல்லை.

7. மாநிலம் முழுவதும் அழகு நிலையங்கள், மசாஜ் நிலையங்கள் இயங்கத் தடை விதிக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.


M.K.Stalin
@mkstalin

மழை - வெயில் - பெருந்தொற்றிலும் உயிரைப் பணயம் வைத்து செய்தித்தாள்கள், காட்சி - ஒலி ஊடகங்களில் பணியாற்றி வருகின்ற ஊடகத் துறையினர் அனைவருமே தமிழகத்தில் முன்களப் பணியாளர்களாகக் கருதப்படுவர்.

முன்களப் பணியாளர்களுக்குரிய உரிமைகள் - சலுகைகள் அவர்களுக்கும் உரிய முறையில் வழங்கப்படும்.

8:35 AM · May 4, 2021

25.8K 726 Share this Tweet

# ஊடகத்துறையினர் சகலரும் முன்களப் பணியாளர்கள்!

## ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, மே 05

ஊடகத்துறையினர் அனைவருமே தமிழகத்தில் முன்களப் பணியாளர்களாகக் கருதப்படுவதாகவும், அவர்களுக்குரிய உரிமைகள், சலுகைகள் உரிய முறையில் வழங்கப்படும் என்றும் தமிழக முதல்வராக பதவியேற்கவுள்ள ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் கொரோனா தாக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து வருகிறது. தற்போது 2ஆவது அலை தீவிரமாக பரவி வரும் சூழலிலும் ஊடகத்துறையினர் ஓயாமல் செய்தி சேகரித்து வருகின்றனர். கொரோனா வைரஸ் தாக்கமுள்ள இந்த காலத்திலும் களத்தில் இருந்து செய்தி சேகரிக்கும் பல்வேறு ஊடகங்களில் பணிபுரியும் பத்திரிகையாளர்களை, 'முதல்நிலை பணியாளர்கள்' என, மத்திய பிரதேச முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் மற்றும் மேற்குவங்க முதல்வர் மம்தா ஆகியோர் பாராட்டியுள்ளனர்.

இந்நிலையில், தமிழகத்தில் புதிய முதல்வராக பொறுப்பேற்கஉள்ள திமுக தலைவர் ஸ்டாலினும் பாராட்டியுள்ளார்.

# முழு பொறுப்புடன் பணியாற்றுவோம்

## எடப்பாடி பழனிசாமி கூறுகிறார்

சென்னை, மே. 05

அ.தி.மு.க.வின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அந்தக் கட்சியின் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர்கூட்டாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில், தமிழக சட்டமன்றத்தின் எதிர்க்கட்சி என்ற பெரும்பொறுப்புடன் அ.தி.மு.கவின் கொள்கை வழிநின்று பணியாற்றுவோம் என அவர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன், தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின்சார்பில்போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும், தமக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கும் அவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையில்-

தொடர்ந்து 10 ஆண்டு காலம் நடைபெற்ற அ.தி.மு.க. அரசு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக ஆற்றியிருக்கும் அரும்பணிகளை மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். இந்நிலையில், நிர்வாகம் என்ற நாணயத்தின் ஒருபக்கம் ஆளும் கட்சியாகவும் மற்றொரு பக்கம் எதிர்க் கட்சியாகவும் இருக்கும். எனவே, தமிழக சட்டமன்றத்திலும் ஆட்சி நிர்வாகத்திலும் எதிர்க்கட்சி என்ற பெரும் பொறுப்புடன் பணியாற்றுவோம்-என அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

# மத்தியில் ஆட்சி மாற்றம்!

## சிதம்பரம் யோசனை

"எதிர்க்கட்சிகள் தொடர்ந்து, ஒன்றாக செயல்பட்டால், மத்தியில் ஆட்சி மாற்றம் உறுதி," என, முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் கூறினார்.

காரைக்குடியில் அவர் அளித்த பேட்டியில்-

ஸ்டாலின் முயற்சியால், வெற்றி கிடைத்துள்ளது. மத்திய அரசின் பணம் மற்றும் அதிகார பலம், தேர்தல் கமிஷனின் நிலை பிரண்ட நடவடிக்கை என, அனைத்தையும் தாண்டி, மிகப்பெரிய வெற்றி பெற்ற மம்தாவிற்கு பாராட்டுக்கள். தேர்தல் கமிஷனை சீரமைக்க வேண்டும். தலைமை தேர்தல் கமிஷனராக சிறந்த அதிகாரிகள் வர வேண்டும். காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு எதிராக செயல்பட்ட வர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.தமிழகத்தில்பா.ஜ.,வை வெற்றியடைய செய்த நான்கு தொகுதி மக்களும், விரைவில் வருந்துவர். நாம்தமிழர்கட்சிக்கு ஓட்டளித்தவர்களின்எதிர்காலம் குறித்து, கவலை யடைகிறேன். அவர்களை அடையாளம் கண்டு, எங் கள் பக்கம் இழுக்க முயற்சி செய்வேன் -என்று கூறினார்.

# இந்தியர்கள் சட்டவிரோதமாக இலங்கை வருவதற்கு திட்டம்!

*எச்சரிக்கிறார் காஞ்சன விஜேசேகர*



கொழும்பு, மே. 05

**இந்தியர்கள் சட்டவிரோதமாக இலங்கை வருவதற்கு திட்டமிட்டுள்ளதாக தெரியவருவதால் இவ்விடயம் குறித்து அதிக அவதானம் செலுத்துமாறு கடற்படையினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என கடற்தொழில் துறைமுக அபிவிருத்தி, ஆள்கடல் பலநாள் கடற்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.**

மாத்தறை பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கொவிட்-19 வைரஸ் தாக்கம் தீவிரமாகியுள்ள நிலையில் மீன்பிடி கைத்தொழில் நடவடிக்கைகளின் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பேலியகொடை மீன் சந்தை கொத்தணி காரணமாக கடந்த காலங்களில் பாரிய நெருக்கடிகளை எதிர் கொள்ள நேரிட்டது. எனவே மீன்பிடி கைத்தொழில் குறித்து அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியர்கள் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வர திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்விடயம் குறித்து அதிக கவனம் செலுத்துமாறு கடற்படையினருக்கும், துறைமுக திணைக்களத்திற்கும், கரையோர பாதுகாப்பு பிரிவினருக்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் நாட்டில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் கொவிட் வைரஸ் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியர்களுக்கு சிகிச்சை வழங்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக எதிர்த்தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். நாட்டு மக்களை பாதுகாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

நெருக்கடியான சூழ்நிலையில் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எதிர்த்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்ள முயற்சிப்பது வெறுக்கத்தக்கதாகும். அனைத்துத் தரப்பினரும் ஒன்றினைந்து செயற்பட்டால் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெற்றிக் கொள்ள முடியும்- என்றார்.



## வவுனியாவில் பஸ்களை வழிமறித்து சுகாதார பரிசோதகர்கள் சோதனை

வவுனியா, மே. 05

கொரோனா தொற்று தீவிரம் பெற்றதையடுத்து வவுனியாவில் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் போக்குவரத்து வாகனங்களை வழிமறித்து விசேட சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா தாக்கம் வவுனியா மாவட்டத்திலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதுடன், நேற்று காலை 6.30 மணி முதல் விசேட சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இதன்போது வவுனியா - மன்னார் வீதியின் பட்டானிச்சூர், குருமன்காடு ஆகிய பகுதிகளில் வீதிகளூடாக பயணித்த பயணிகள் பஸ்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்கள் என்பவற்றை வழிமறித்து சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்பது குறித்து சுகாதார பரிசோதகர்கள் சோதனை நடத்தினர்.

இதன்போது சமூக இடைவெளிகளைப் பேணாது அதிகமாக பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ்களுக்கு எதிராக முறைப்பாடுகளை பதிவு செய்ததுடன், முச்சக்கர வண்டிகளில் சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றாதவர்களுக்கு எதிராகவும் முறைப்பாடுகளை பதிவு செய்தனர்.

அத்துடன் மோட்டர் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பவற்றில் பயணிக்கும் போது முககவசம் அணியாது சென்றவர்களையும் வழிமறித்த சுகாதார பரிசோதகர்கள் அவர்களுக்கு எதிராகவும் முறைப்பாடு பதிவு செய்தனர்.

## பொதுமன்னிப்பு கோரும் கடிதத்தில் கையெழுத்திட்ட ரஞ்சன் ராமநாயக்க



கொழும்பு, மே. 05

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டு சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பொதுமன்னிப்பு கோரும் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளார்.

ரஞ்சன் கையெழுத்திட்ட கடிதம் உள்ளிட்ட ஆவணங்களை சட்டத்தரணி ஆஷான் பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் ஒப்படைத்தார்.

இந்த ஆவணங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஒப்படைக்க திட்டமிடப்பட்டுள்ளது என்று அறியப்படுகிறது.

ரஞ்சனுக்கு மன்னிப்பு வழங்கும்படி ஜனாதிபதியிடம், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொலைபேசியில் கோரியிருந்தார். இதற்கான ஆவணங்களை முறைப்படி சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி கேட்டிருந்தார். இதன்படி, பொதுமன்னிப்பு கோரும் கடிதத்தில் ரஞ்சன் ராமநாயக்க கையெழுத்திட்டுள்ளார்.



## நாடெங்கும் அமைக்கப்படவுள்ளன 500 திறந்த உடற்பயிற்சி கூடங்கள்

கொழும்பு, மே. 05

நாடு முழுவதும் 500 திறந்த வெளி உடற்பயிற்சிக் கூடங்களை நிறுவ விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை நேற்று அங்கீகாரமளித்துள்ளது.

625 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கண்ரெய்னர் வடிவிலான இந்த வெளிப்புற உடற்பயிற்சிக் கூடங்கள் நாடெங்கும் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் நாமல் தெரிவித்துள்ளார்.

அன்றாட உடற்பயிற்சியை ஊக்குவிப்பதன் மூலம் சுறுசுறுப்பான சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இதற்கான முன்மொழிவை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் துறை அமைச்சு முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## ரஞ்சனின் இடத்துக்கு ஹர்ஷ!



கொழும்பு, மே. 05

பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்றக் குழு (கோப்) உறுப்பினர் பதவியில் இருந்து ரஞ்சன் ராமநாயக்க பதவி விலகியதன் மூலம் உருவான வெற்றிடத்துக்கு, கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நியமிக்கப்படுவார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

30 ஆம் திகதி கூடிய பாராளுமன்ற நடவடிக்கைக் குழு இந்த நியமனத்தை செய்ததாகவும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

சபையின் தொடக்கத்தில் அறிவிப்புகளை வெளியிடும் போது சபாநாயகர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

## இந்தியர்களுக்கு சுற்றுலா விசாவை இடைநிறுத்துகிறது இலங்கை அரசு

கொழும்பு, மே. 05

இந்தியர்களுக்கான சுற்றுலா விசாக்களை இடைநிறுத்த இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

இந்தியாவில் பரவும் கவலைக்குரிய புதிய திரிபு கொரோனா வைரஸ் இலங்கைக்குள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற கொவிட் தடுப்பு தேசிய செயலணிக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

எனினும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட முன்னரே கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலா விஸாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த விசாக்களை பயன்படுத்தி இந்தியர்கள் நாட்டுக்குள் நுழையலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏப்ரல் 29 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்ட விஸாக்களை வைத்திருப்போரும் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

கடந்த ஏப்ரல் மாதத்தின் நான்கு வாரங்களிலும் வாராந்தம் முறையே 1,159, 780, 795, 1,079 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்க விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 29 முதல் நேற்றுமுன்தினம் வரை 602 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று முன் தினம்வரை பிற நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு இலங்கை எந்தத் தடையையும் விதிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில் அங்கிருந்து பலர் இலங்கை வந்து விடுதிகள் உள்ளிட்ட பல இடங்களில் தனிமைப்படுத்தலில் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இந்தியாவில் பரவும் ஆபத்தான வகை வைரஸ்கள் இலங்கைக்குள் நுழையலாம் என சுகாதார வல்லுநர்கள் எச்சரித்திருந்தனர். அத்துடன், வெளிநாட்டவர்களைத் தடுக்கும் வகையில் விமான நிலையங்களை மூடுமாறும் சுகாதார வல்லுநர்கள் அரசை வலியுறுத்தி வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வடமாகாண வைத்தியசாலைகளில் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 05

வடக்கிலுள்ள வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை வசதிகளை மேம்படுத்த உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இதன்போதே வடக்கு மாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளில் தீவிர சிகிச்சை வசதிகளையும், படுக்கை வசதிகளையும் மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள எந்த வைத்தியசாலையிலும் சாதாரண சுவாச சிக்கலுள்ள கொரோனா நோயாளிகளுக்கும் சிகிச்சையளிக்க வசதியில்லை. இதனால், வைத்தியசாலை வசதிகளை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மாங்குளத்தில் கொரோனா வைத்தியசாலையொன்றை அமைக்க திட்டமிடப்பட்டபோதும், தென்னிலங்கை நோயாளர்களை சிகிச்சைக்கு கொண்டு வரப்படவுள்ளதாக கூறிய சர்ச்சையையடுத்து, அது இடைநிறுத்தப்பட்டதுடன், வடக்கிலுள்ள தீவிர நோயாளர்கள் தொடர்ந்து தெற்கிற்கு அனுப்பப்பட்டனர்.

இந்த நிலையில், வடக்கிலுள்ள நோயாளர்களை வடக்கிலேயே வைத்து சிகிச்சையளிக்கவும், தேசிய கொள்கையின் அடிப்படையின் வெற்றிடமாக உள்ள விடுதிகளில் நாட்டின் வேறெந்த பகுதியிலாவது அதிகரித்த நோயாளர் இருப்பின், அவர்களை அனுமதித்து சிகிச்சையளிக்கவும் இந்த அவசர ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

# கொரோனா வைரஸ் நிலைமையை கட்டுப்படுத்த ரஷ்யா உதவவேண்டும்

## தூதுவரிடம் சஜித் நேரில் வேண்டுகோள்

**கொழும்பு, மே05**

**இலங்கையின் கொரோனா வைரஸ் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு ரஷ்யா உதவ வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.**



ரஷ்யத் தூதுவர் யூரி மட்டேரியை சந்தித்தவேளை அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். இலங்கைக்கு நடமாடும் மருத்துவமனைகள், பி.சி.ஆர் இயந்திரங்கள், தீவிர கிசிச்சை பிரிவு, கட்டில்கள் போன்றவற்றை வழங்குமாறு சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மூன்றாவது கொரோனா வைரஸ் அலை காரணமாக இலங்கை பெரும் நெருக்கடியான காலத்தில் உள்ளது எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர், தீவிர சிகிச்சைப் பிரிவின் கட்டில்கள், பி.சி.ஆர் இயந்திரங்கள் போன்றவற்றுக்கான அவசரத்தேவை காணப்படுகின்றது எனவும் கூறினார்.

இதன் காரணமாக இலங்கை உதவவேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கின்றேன் எனவும் சஜித் பிரேமதாஸ வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கையின் முக்கிய எதிர்க்கட்சி கொரோனா வைரஸுக்கு எதிரான போராட்டத்தில் இணைந்து கொள்ள தீர்மானித்துள்ளது என அவர் தெரிவித்தார்.

## இராணுவத் தளபதியின் மருமகள் திருமணம் ஆடம்பர ஹோட்டலொன்றில் நடத்தப்பட்டதா?

### செய்தியை மறுக்கிறார் சவேந்திர சில்வா

கொழும்பு, மே 05

கொரோனா வைரஸுக்கு மத்தியில் தனது உறவினர் ஒருவரின் திருமணம் இடம்பெற்றது என சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் பொய்யானவை என இராணுவத் வதளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் திங்கட்கிழமை ஆடம்பர ஹோட்டலொன்றில் தனது உறவினர் ஒருவரின் திருமணம் இடம்பெற்றது என்பதை நிராகரித்துள்ள சவேந்திர சில்வா, இது தனக்கு எதிராக சேறுபூசும் நடவடிக்கை என தெரிவித்துள்ளார்.

சவேந்திர சில்வாவின் உறவினரின் திருமணம் என தெரிவித்து சமூக ஊடகங்களில் படங்கள் வெளியாகியிருந்ததுடன் நேற்று முன்தினம் இந்த திருமணம் முடிவடைந்தவுடன் நாட்டின் அனைத்து திருமணங்களையும் இரண்டு வாரங்களுக்கு தடை செய்ய அதிகாரிகள் தீர்மானித்தனர் என்ற பதிவுகளும் காணப்பட்டன.

எனினும் இதனை நிராகரித்துள்ள சவேந்திர சில்வா தனது சகோதரியின் புதல்விகள் 19 மற்றும் 16 வயதுடையவர்கள் அவர்கள் திருமணம் செய்வதற்கு பல வருடங்கள் உள்ளன என குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் இன்னமும் மாணவிகள். அவர்களின் திருமணம் இடம்பெற்றது என தெரிவிப்பது அபத்தமானது என தெரிவித்துள்ள இராணுவ தளபதி, சேற்றை வாரியிறைக்கும் நடவடிக்கைகளை விட்டுவிட்டு சுகாதார வழிமுறைகளை பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.



## கட்டாயமான இடமாற்றத்தை ஆசிரியர்கள் ஏற்கவேண்டாம்

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 05

ஆசிரிய இடமாற்ற சுற்றறிக்கைக்கு மாறாக ஆசிரியர்களை இடமாற்றம் செய்வது சட்டவிரோதமானது. இதனை ஆசிரியர்கள் ஏற்கத்தேவையில்லை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சங்கம் மேலும் தெரிவிக்கையில்-

சில வலயக்கல்விப் பணிப்பாளர்கள் தமக்கு தேவையானவர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற பாடசாலைகளை வழங்குவதற்காக ஏனைய ஆசிரியர்களை கட்டாய இடமாற்றம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற 2007/20 எனும் இலக்கம் கொண்ட சுற்றறிக்கையிலோ, தாபன விதிக்கோவையிலோ எந்த ஏற்பாடுகளும் இல்லை.

இவ்விடயம் பல ஆசிரியர்களுக்கு தெரிந்திராததால் வலயக் கல்விப்பணிப்பாளர்களின் தன்னிச்சையான தொழிற்பாடுகள் ஆசிரியர்களைப் பாதிக்கின்றன. அத்தோடு சில அதிகாரிகளுக்கு இதன் விளைவுகள் என்னவென்பதும் புரியாதுள்ளது.
இதற்காக பொருத்தமில்லாத கடிதங்களை அனுப்புகின்றனர். அதில் கட்டாயமாக இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கவேண்டும் என வற்புறுத்தப்படுகின்றது.

இதற்காக தற்போதுள்ள அபாயகரமான சூழ்நிலையில் இடமாற்ற விண்ணப்பப்படிவம் பூர்த்தி செய்ய பாடசாலைக்கு வருகை தருமாறு சில அதிபர்கள் ஆசிரியர்களை வற்புறுத்துவதாகவும், தமக்கு விருப்பமில்லாதவர்களை கட்டாய இடமாற்றம் செய்ய முனைவதாகவும் எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஆகையால் ஆசிரிரியர்கள் உங்கள் சுயவிருப்பின்றி இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்கவோ அன்றி வற்புறுத்தல்களுக்கு அஞ்சவோ தேவையில்லை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதற்கு மேலதிகமாக தேவைக்கு அதிகமாக ஆசிரியர்கள் இருப்பின் அது இடமாற்ற சபைமூலம் நிவர்த்தி செய்யப்படும் என்பதும், பற்றாக்குறையான இடங்களுக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள தேசிய ஆசிரிய இடமாற்ற சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறே செயல்படவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம்.இதனை ஏனைய ஆசிரியர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்-என்று கூறப்பட்டுள்ளது.

# மீன்பிடிப் படகில் வந்து புத்தளம் வீட்டில் மறைந்திருந்த தாய், பிள்ளைகள் கைது!

## அடைக்கலம் கொடுத்தவரும் சிக்கினார்

கொழும்பு, மே 05

இந்தியப் பிரஜைகள் மூவர் புத்தளம் பகுதியிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் நேற்று புத்தளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். தாயும் இரண்டு பிள்ளைகளுமான மூவரே சட்டவிரோதமாக இலங்கைக்குள் நுளைந்த குற்றச்சாட்டில் கைதாகியுள்ளனர். இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த வீட்டு உரிமையாளரும் கைதாகியுள்ளார்.

கைதான பெண் 34 வயதானவர் எனவும், அவரது பிள்ளைகள் 13 மற்றும் 4 வயதானவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையிலிருந்து கடந்த வாரம் மீன்பிடிப்படகு ஒன்றில் புறப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் புத்தளத்தை வந்தடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தளத்திலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த நிலையில், கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்ட இவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டனர்.

குடிவரவு, குடியகல்வுச் சட்டம் மற்றும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இவர்களுக்கு அடைக்கலம் கொடுத்த வீட்டு உரிமையாளரான பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார்.

# ஓகஸ்ட் மாதத்தில் சாதாரணதர பரீட்சை

## டிசெம்பரில் உயர்தர தரப்பரீட்சை

கொழும்பு, மே 05

க.பொ.த சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை நடத்தும் காலப்பகுதியில் திருத்தம் மேற்கொள்ளல் மற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்யும் கால இடைவெளியை குறைத்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் காலங்களில் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையை ஓகஸ்ட்டிலும், உயர்தரப் பரீட்சையை டிசெம்பரிலும் நடத்துவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

## 04 தபாலகங்கள், 28 உபதபாலகங்கள் பூட்டு அஞ்சல் சேவையில் தாமதங்கள் ஏற்படலாம்

கொழும்பு, மே 05

கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து 04 தபாலகங்கள், 28 உப தபாலகங்கள் மூடப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் அறிவித்துள்ளார்.

இதனால் தபால் சேவையில் தாமதங்கள் ஏற்படக்கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் நாளுக்கு நாள் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களும் அதிகரித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கடலில் தொடரும் கடத்தலால் குடாநாட்டுக்கு கொரோனா அபாயம்!

## கட்டுப்படுத்தாவிட்டால் நிலைமை எல்லைமீறும்

யாழ்ப்பாணம், மே.05

**வடக்கு கடற்பரப்பில் தொடரும் சட்டவிரோத கடல் நடவடிக்கை மூலம் இந்தியாவில் இருந்து கேரள கஞ்சா கடத்தி வரும் சம்பவங்கள் தொடர்ந்தும் அதிகரித்துள்ள நிலையில் யாழ். குடாநாட்டுக்கு கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.**

தமிழ்நாடு உள்ளிட்ட இந்தியாவில் கொரோனா உச்ச நிலையில் மாபெரும் மனித பேரவலமாக மாறியுள்ளது.

தினசரி 4 இலட்சத்துக்கு குறையாத தொற்றாளர்களும், 4 ஆயிரத்துக்கு குறையாத பலியெடுப்புகளும் நிகழ்ந்து வருகின்றன. மருத்துவத்துறையில் வளர்ச்சியடைந்த இந்தியாவே திணறும் நிலையை உலகம் கவலையுடன் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்க நினைக்கும் சிலர், ஆபத்தின் வீரியத்தை விளங்காது இவ்வாறு சட்டவிரோத நடவடிக்கைகளை இந்தியாவில் இருந்து முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக கடல் வழியாக இந்தியாவில் இருந்து கேரள கஞ்சா போதைப் பொருளை கடத்தி வரும் சம்பவங்கள் கடந்த நாட்களில் தொடர்ந்து அதிகரித்துள்ளன.

பருத்தித்துறை - சுப்பர்மடம் கடற்பரப்பில் நேற்று அதிகாலை 01.00 மணியளவில் 100 கிலோ கேரள கஞ்சா பருத்தித்துறை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளது.

இச்சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 'ரோசா' ரக மினிபஸ் மற்றும் சாரதியும் கைது செய்யப்பட்ட நிலையில் படகில் வந்தவர்கள் தப்பியோடியுள்ளனர்.

இபோன்று, நேற்று முன்தினம் பருத்தித்துறை தம்பசிட்டி வீடொன்றில் இருந்து 34 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதேபோன்று நேற்று முன்தினம் காலையில் காங்கேசன்துறை கடற்பரப்பில் 183 கிலோ கேரளா கஞ்சா பொதிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் வடக்கு கடலில் இவ்வாறான சட்டவிரோத கடல் நடவடிக்கைகள் தொடர்ந்து வருவதால் இந்தியாவில் உள்ளவர்கள் மூலம் யாழ். குடாநாட்டுக்குள்ளும் கொரோனா தொற்று பரவும் அபாயமேற்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்படாத சந்தரப்பங்களில் தமது சட்டவிரோத கடல் பயணத்தை மறைத்து இயல்பாக சமூகத்தில் நடமாடித் திரிந்து வருகின்றனர்.

இதன் மூலம் யாழ் மாவட்ட கரையோரப் பகுதிகள் உள்ளிட்ட பிரதேசங்கள் மிகுந்த கொரோனாத் தொற்று அபாயமுள்ள பகுதிகளாக மாறிவருகின்றன.

இவ் அபாய நிலையை கருத்தில் கொண்டு இவ்வாறான சட்டவிரோத கடல் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை குறித்த கடற்றொழில் சங்கங்கள் கூடுதல் கவனமெடுத்து கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

இல்லையெனில் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல்களை வழங்கி எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

## அதிகளவு பணிச்சுமைகள் காரணமாக நெருக்கடியை எதிர்நோக்கும் தாதியர்

கொழும்பு, மே 05

தற்போதைய சூழலில் தாதியர்கள் அனைவரும், அதிக பணிச்சுமை காரணமாக பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சங்கத்தின் உபசெயலாளர் புஷ்பா ரம்யானி டி சொய்ஷா இதனைத் தெரிவித்துள்ளார்.

குறைந்தளவான தாதியர்களைக் கொண்ட பணிக்குழாமினரே சேவையில் ஈடுபடுவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தற்போது 38,000 தாதியர்கள் மொத்தமாக சேவையாற்றி வருகின்றனர்.

எனினும், இந்த எண்ணிக்கையின் இரு மடங்கு எண்ணிக்கையான தாதியர்கள் அவசியமாக உள்ளனர் என அரச சேவை ஐக்கிய தாதியர் சங்கத்தின் உபசெயலாளர் தெரிவித்துள்ளார்.

## மத்திய மாகாணத்தில் இதுவரை 9,577 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, மே 05

கொரோனா வைரஸ் தாக்கத்தால் மத்திய மாகாணத்தில் கடந்த ஒக்ரோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று காலை 6 மணிவரை 9 ஆயிரத்து 577 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

இதன்படி நுவரெலியா மாவட்டத்தில் 1,187 பேருக்கும், கண்டி மாவட்டத்தில் 6,072 பேருக்கும், மாத்தளை மாவட்டத்தில் 1,818 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது. இவர்களில் 75 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் இதுவரை குணமடைந்துள்ளனர்.

அதேவேளை, கண்டி மாவட்டத்தில் நேற்று மாத்திரம் 58 பேருக்கும், மாத்தளை மாவட்டத்தில் 50 பேருக்கும், நுவரெலியா மாவட்டத்தில் 104 பேருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

## கொரோனா வைரஸிலிருந்து பாதுகாக்கும் தலைக்கவசம்

### களனி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கினர்

கொழும்பு, மே. 05

கொவிட் - 19 வைரஸிலிருந்து பாதுகாக்கக்கூடிய தலைக்கவசம் ஒன்றை களனி பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி குழு உருவாக்கியுள்ளது.

இந்த தலைக்கவசம் முகக்கவசம் மற்றும் கையுறைக்கு பதிலாக பயன்படுத்தப்படலாம் என்று ஆராய்ச்சி குழு தெரிவித்துள்ளது.

இந்த தலைக்கவசம் ஒரு அடையாள குறியீட்டையும் கொண்டுள்ளது. எனவே தேசிய பாதுகாப்புக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்று ஆராய்சிக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆராய்ச்சிக் குழுவின் குழு உறுப்பினர்கள் மருத்துவர் ரங்கிகா பண்டார மற்றும் அகிலா லன்சகர ஆகியோர் தெரிவித்ததாவது;

தலைக்கவசம் முகத்தின் பகுதியை முழுவதுமாக உள்ளடக்கியது. காற்றோட்டம் முதலில் வடிகட்டடப்பட்டு பின்னர் முகக்கவசம் வழியாக நுழையும்.



தலைக்கவசம் ஒரு வெளியேற்ற விசிறியைக் கொண்டுள்ளது. அது வியர்வையைத் தடுக்கும். அத்துடன், மூக்குக் கண்ணாடி அணிந்த நபர்களுக்கு பனிமூட்டத்தைத் தவிர்க்கிறது.

இந்தத் தலைக்கவசம் ஒரு ஐ.ஆர் சென்சருடன் வருகிறது. இது அணிந்தவரிடமிருந்து ஒரு மீற்றருக்குள் அதிக உடல் வெப்ப நிலையைக் கொண்ட ஒரு நபரைக் கண்டுபிடிக்கும் - என்றனர்.

## நாட்டில் இதுவரை 80 இற்கும் மேற்பட்ட கிராம சேவகர் பிரிவுகள் 'லொக்டவுன்'

கொழும்பு, மே. 05

நாட்டில் கடந்த 21 ஆம் திகதி முதல் இன்று வரை 82 கிராம சேவகர் பிரிவுகளும், 6 இற்கும் மேற்பட்ட பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நுவரெலியா உட்பட 5 மாவட்டங்களின் மேலும் 9 கிராம சேகர் பிரிவுகள் நேற்று காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, நுவரெலியா மாவட்டத்தில், நோர்வூட் பொலிஸ் பிரிவில், இன்ஜஸ்றி கிராம சேவகர் பிரிவும், ஹற்றன் பொலிஸ் பிரிவில் போடைஸ் தோட்டம் கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. கம்பஹா மாவட்டத்தில் எல்தெனிய தேவாலய வீதி மற்றும் ரணவிரு தர்மசிறி மாவத்தை ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும், இரத்தினபுரி மாவட்டத்தில், கங்குல்விட்டி , பொத்துபிட்டி வடக்கு, கலவான ஹப்புகொட கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத் தப்பட்டுள்ளன.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் வில்லோர தோட்டம் கிராம சேவகர் பிரிவும், களுத்துறை மாவட்டத்தில் போம்புவல கிராம சேவகர் பிரிவும் இன்று காலை முதல் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நாட்டில் கடந்த 21 ஆம்திகதி முதல் இன்றுவரை 82 கிராம சேவகர்பிரிவுகளும், 6 இற்கும்மேற்பட்ட பொலிஸ் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

## ரஷ்யாவின் ஸ்பூட்னிக் வி தடுப்பூசி இலங்கை வந்தது

கொழும்பு, மே.05

ரஷ்யாவின் 15,000 ஸ்பூட்னிக்-வி கொவிட்19 தடுப்பூசிகள் அடங்கிய முதல் தொகுதி நேற்று காலை இலங்கையை வந்தடைந்தது.

இதனையடுத்து மேலும் 200,000 மற்றும் 300,000 தடுப்பூசிகள் அடங்கிய தொகுதிகள் இம்மாத இறுதிக்குள் நாட்டுக்கு வரும் என இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவிடம் இருந்து மொத்தம் 6.5 மில்லியன் ஸ்பூட்னிக்-வி கொவிட்19 தடுப்பூசிகளை வாங்க இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் ஒப்பந்தம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார்!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, மே. 05

நாட்டில் நடந்து வரும் கொரோனா தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டுவர அரசுக்கு ஆதரவு வழங்குவதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க அரசாங்கம் எடுக்கும் எந்தவொரு நல்ல நடவடிக்கையையும்தாம் ஆதரிக்கப்போவதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க செய்தியாளர் சந்திப்பின்போது தெரிவித்தார்.

அரசாங்கம் இதுவரை தமது ஆதரவைக்கோரவில்லை, ஆனால் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சியாக அரசாங்கத்தை ஆதரிக்க தாம் தயார். தற்போதைய தொற்றுநோயிலிருந்து அரசியல் நன்மைகளைப் பெற தாம் முயற்சிக்கப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு எதிராக தாம் எந்த நேரத்திலும் வீதிகளில் இறங்கலாம், ஆனால் நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு அதை செய்யப்போவதில்லை.

எந்த விமர்சனத்தை முன்வைக்கிறோமோ அது விரோதங்களை நோக்கமாகக் கொண்டதாக இருக்காது, ஆனால் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.

தற்போதைய மூன்றாவது அலைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். குறிப்பாக சமீபத்திய பண்டிகைக் காலங்களில், மக்கள் பின்பற்றவேண்டிய சரியான சுகாதார வழிகாட்டுதல்களை அறிமுகப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது. மேலும், வெளிநாட்டினருக்கான தனிமைப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான முடிவும் ஒரு தவறு என்றும் அத்தநாயக்க குறிப்பிட்டார்.



சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி அந்தஸ்தில் இருந்த தேமுதிக நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் ஒரு இடத்தில் கூட வெற்றி பெற வில்லை. அதை விட 0.43வீத வாக்குகளை பெற்று படுதோல் வியடைந்துள்ளது. தேமுதிகவின் வீழ்ச்சி எங்கே தொடங்கியது? ”

# எப்படி இருந்த கட்சி?

# தவறான அரசியல் முடிவுகளால் தடுமாறிய விஜயகாந்தின் தே.மு.தி.க.

பாலாஜி எல்லப்பன்

சினிமாவில் ஊழலை எதிர்ப்பவராகவும் தீவிரவாதிகளை விரட்டிப் பிடிப்ப வராகவும், நேர்மையான போலீஸ் அதிகாரியாகவும் நடித்து புகழடைந்த நடிகை விஜயகாந்த் அவருடைய ரசிகர்களால் புரட்சிக் கலைஞர் என்று கொண்டாடப்பட்டார். ரசிகர்களின் அழைப்பை ஏற்று, ரசிகர்களின் ஆதரவு தளத்தைக் கொண்டு அரசியலில் இறங்க முடிவு செய்த விஜயகாந்த் 2005 ஆம் ஆண்டு தேசிய முற்போகு திராவிடர் கழகத்தை தொடங்கினார். கட்சி தொடங்கிய 6 ஆண்டு களிலேயே தமிழக சடப்பேரவையில் தே.மு.தி.கவை எதிர்க்கட்சியாக மாற்றிக் காட்டினார்.

தி.மு.கவை முந்தி சட்டப்பேரவையில் எதிர்க்கட்சியாக இருந்தது. ஆனால், நடந்து முடிந்த 2021ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத் தேர்தலில் தே.மு.தி.க. ஒரு இடத்தில் கூட வெற்றி பெறவில்லை. அதைவிட மொத்தமாக 0.43வீத வாக்குகளை மட்டுமே பெற்று படுதோல்வியடைந்துள்ளது. தே.மு.தி.கவின் வீழ்ச்சி எங்கே தொடங்கியது. எப்படி இருந்த கட்சி இப்படி ஆனதற்கு என்ன காரணம்? என்று ஒரு அலசல்.

விஜயகாந்த் 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தே.மு.தி.க. கட்சியைத் தொடங்கியதும், அடுத்து வந்த 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் அவருடைய கட்சி தனித்து களம் கண்டது. விஜயகாந்த் விருத்தாச்சலம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால், மற்ற 233 தொகுதிகளிலும் தே.மு.தி.க. தோல்வியடைந்தது. ஆனால், யாருமே எதிர்பார்க்காத வகையில் விஜய காந்த்தின் தே.மு.தி.க. 2006ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 8.5வீத வாக்குகளைப் பெற்று பிற அரசியல் கட்சிகளின் புருவத்தை உயர்த்த வைத்தது.

இதையடுத்து, 2009ஆம் ஆண்டு நடைபெற்ற நாடளுமன்றத் தேர்தலிலும் யாருடனும் கூட்டணி இல்லை என்று தமிழகத்தில் 39 தொகுதிகளிலும் தனித்து போட்டியிட்ட தேமுதிக 10.3வீத வாக்கு களைப் பெற்று மேலும் ஒரு படி வளர்ந்திருந்தது.

விஜயகாந்த் அப்போது எல்லாம், தேர்தல் பிரசாரங்களில் சினிமாவில் ஊழல் அரசியல் வாதிகளுக்கு எதிராக வசனம் பேசுவது போல, வரிந்து கட்டி பேசி விளாசினார்.

இதையடுத்து, 2011 ஆம் ஆண்டு தேர்தலில் அ. தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் 41 தொகுதிகளில் போட்டியிட்ட தே.மு.தி.க. 29 தொகுதிகளில் வெற்றி பெற்றது.
ரிஷிவந்தியம் தொகுதியில் போட்டியிட்ட விஜயகாந்த் பெரிய வெற்றி பெற்றார். 2006-2011 வரை ஆளும் கட்சியாக இருந்த தி.மு.க. வெறும் 23 இடங்களில் வெற்றி பெற்றதால் தே.மு.தி.க. தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி இடத்தைப் பிடித் தது. தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவரானார். அதற்குப் பிறகு, அ.தி.மு.கவுடன் மோதல் போக்கை மேற்கொண்ட தே.மு.தி.க. விரைவிலேயே அதிமுக கூட்டணியில் இருந்து விலகியது. 2011ஆம் சட்ட மன்றத் தேர்தலில் தேமுதிக 7.9வீத வாக்குகளைப் பெற்றிருந்தது.

இந்த காலங்களில்தான் தேமுதிக தலைவர் விஜய காந்த் உடல்நிலை சிறிது குன்றத் தொடங்கியது. ஊடக வியலாளர்களிடம் கடுமையாக நடந்து கொண்டார்.

அடுத்து வந்த 2014ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவின் தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்ற தே.மு.தி.க. 14 இடங்க ளில் போட்டியிட்டு அனைத்து இடங்களில் தோல்வி யைத் தழுவியது. ஆனால், இந்த தேர்தலில் தே.மு. தி.க. 5.1வீத வாக்குகளைப் பெற்றது. இப்படி, தே.மு.தி.கவின் வாக்கு சதவீதம் தேர்தலுக்கு தேர்தல் தேய ஆரம்பித்தது.

இதையடுத்து, 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில், அதிமுகவுடனோ திமுகவுடனோ கூட் டணி அமைக்க மறுத்த தே.மு.தி.க, மக்கள் நலக் கூட்ட ணியில் இணைந்தது. ம.தி.மு.க., சி.பி.ஐ, சி. பி.எம், வி.சி.க, த.மா.கா. ஆகிய கட்சிகள் விஜயகாந்த்தை தங்கள் கூட்டணியின் முதல்வர் வேட்பாளர் என்று அறிவித்தனர். ஆனால், மக்கள் நலக் கூட்டணியில் இடம் பெற்ற தே.மு.தி.க. 2016ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் 105 இடங்களில் போட்டியிட்டு ஒரு இடங்களில்கூட வெற்றி பெறவில்லை. அதைவிட, விஜயகாந்த் போட்டியிட்ட உளுந்தூர்பேட்டை தொகுதியில் டெபாசிட் இழந்து 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். அதுமட்டுமில்லாமல், இந்த தேர்தலில் தேமுதிக 2.41வீத வாக்குகளை மட்டுமே பெற்றது என்பது தே.மு.தி.கவின் மிகப் பெரிய வீழ்ச்சியாக கருதப்பட்டது.

தேர்தல் முடிந்ததுமே மக்கள் நலக் கூட்டணி கலைந்தது. மக்கள் நலக் கூட்டணியில் சேர்ந்ததால்தான் தே.மு.தி. கவுக்கு இவ்வளவு பெரிய தோல்வி என்று கருதிய தே.மு.தி.க. தலைமை அடுத்து வந்த 2019ஆம் ஆண்டு மக்கள வைத் தேர்தலில் அ.தி.மு.க, பா.ஜ.க, பா.ம.க. இடம்பெற்ற தேசிய ஜனநாயக கூட்டணியில் 4 தொகுதிகளில் போட்டியிட்ட தே.மு.தி.க. அனைத்து தொகுதிகளிலும் தோல்வியைத் தழுவியது. இந்தக் காலகட்டங்களில் விஜயகாந்த் உடல்நிலை கடுமையாக பாதிக்கப்பட்டது. வெளிநாடுக்கு சிகிச்சைக்கு சென்றுவந்தார்.

இந்த சூழலில்தான் 2021 சட்டமன்றத் தேர்தல் வந்தது. விஜயகாந்த் கட்சி செயல்பாட்டில் உடல்நிலை காரணமாக பின் சீட்டுக்கு போயிருந்தார். விஜயகாந்த் மனைவி பிரேமலதா கட்சியில் பொருளாளராகவும் முக்கிய முடிவுகளை எடுப்பவராக மாறியிருந்தார். அவர் ஒரே நேரத்தில், அ.தி.மு.கவுடனும் தி.மு.கவுடனும் கூட்டணி பேரம் பேசியதாக ஊடகங்களில் பேசப்பட்டது. அ.தி.மு.க. கொடுத்த குறைவான தொகுதிகளை ஏற்க மறுத்த பிரேமலதா விஜயகாந்த் தே.மு.தி.கவை டி.டி.வி. தினகரன் தலைமையிலான அ.ம.மு.கவுடன் கூட்டணி அமைத்தார். அ.ம.மு.கவுடனான கூட்டணியில் இந்த தேர்தலில் தே.மு.தி.க. 60 தொகுதிகளில் போட்டி யிட்டது.

விஜயகாந்த் இந்த தேர்தலில் போட்டியிட வில்லை. ஆனால், பிரேமலதா விஜயகாந்த் விருத்தாச் சலம் தொகுதியில் போட்டியிட்டார். வாக்கு எண்ணிக்கை முடிவில் தே.மு.தி.க. அனைத்து தொகுதிகளிலும் படுதோல்வி அடைந்தது. பிரேமலதா விருத்தாச்சலத்தில் டெபாசிட் இழந்து 3ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டார். அதோடு, தேமுதிக 60 தொகுதிகளிலும் 2,00,156 வாக்குகளைப் பெற்று வெறும் 0.43வீத வாக்குகளை மட்டுமே பெற்றது.

தமிழக சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி அந்தஸ் தைப் பிடித்த தேமுதிக கடந்த 10 ஆண்டுகளில், அக்கட்சி யின் தவறான அரசியல் முடிவுகளால், அக்கட்சி தொடங்கும்போது இருந்த செல்வாக்கைவிட பல மடங்கு குறைவாக வீழ்ச்சியைக் கண்டுள்ளது. தேமுதிகவின் வீழ்ச்சிக்கு தவறான அரசியல் முடிவுகள் மட்டும் காரணம் அல்ல. விஜயகாந்த் எனும் சினிமா நட்சத்திர பிம்பத்தை மையமாக வைத்து உருவான கட்சி. அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் உடல்நலக் குறைவு ஏற்பட்டு கட்சிப் பணியிலும் பிரசாரத்திலும் ஈடுபடாதது மிக முக்கிய காரணமாக அமைந் துள்ளது. - நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்




# “எங்கள் நாட்டில் கொரோனா இல்லை”

## அழித்துச் சொல்லும் வடகொரியா சந்தேகம் கிளப்பும் உலக நாடுகள்!

ரா. அரவிந்த்ராஜ்

> கொரோனா இல்லை என்று சொல்லும் வட கொரியா கடந்த பிப்ரவரி மாதம் வரை சுமார் 19லட்சம் கொரோனா தடுப்பூசிகளை ஐ.நாவின் கொரோனா நோய் தடுப்புத் திட்டத்தின் மூலம் பெற்றிருப்பதாக ஐ.நா. தெரிவிக்கிறது. கொரோனா அச்சம் காரணமாக, வருகிற ஜூலை 23ஆம் திகதி ஜப்பானில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும் கலந்துகொள்ளப் போவதில்லை என தெரிவித்திருக்கிறது வட கொரியா.

“எங்கள் நாட்டில் கொரோனா தொற்று இல்லை, வைரஸால் யாரும் பாதிப்படையவில்லை” எனத் தொடர்ந்து உலக சுகாதார அமைப்பிடம் கூறிவருகிறது வடகொரியா.

கொரோனா நோய்த் தொற்று இல்லாத நாடே இல்லை எனும் அளவுக்கு உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவியிருக்கிறது. நோயைக் கட்டுப்படுத்துதல், தடுப்பூசிகள் என உலமே பரபரத்துவரும் நிலையில், “எங்கள் நாட்டில் கொரோனா இல்லை” என்று கூலாக இருக்கிறது ஒரு நாடு!

**வட கொரியா: தூண்டிலில் சிக்காத திமிங்கலம்!**

கொரிய தீபகற்பத்தின் கம்யூனிச நாடு வடகொரியா. இங்கு கிம் ஜாங் உன் தலைமையில் அதிபர் ஆட்சி நடைபெற்றுவருகிறது. கடந்து சில ஆண்டுகளில், மூன்றாம் உலகப்போர் மூண்டுவிடுமோ எனும் அளவுக்கு உலக அமைதிக்கு அச்சுறுத்தலாகப் பார்க்கப்பட்ட வட கொரியா, தடையை மீறி அணு ஆயுத சோதனைகள் நடத்தி அமெரிக்க வல்லரசுக்குச் சவால் விடுத்தது. பின்னர், காலம் கனியவே, அமெரிக்க அதிபர் டிரம்ப் உடனான கிம்மின் சந்திப்பால் நிலைமை சற்றே தணிந்தது. அவ்வப்போது தனது செயல்களால் உலகின் கவனத்தைத் தன் பக்கம் ஈர்த்து வந்த வடகொரியா, கொரோனா தொற் றின் காரணமாக இருக்கும் இடம் தெரியாமல் திரைமறைவு வாழ்க்கையை நடத்திவருகிறது.



அதன் அமைதியைக் கண்டு அவ்வப்போது அதிபர் கிம் ஜாங் உன் இறந்துவிட்டார் என வதந்திகள் கிளம்பு வதும், அதை முறியடித்து கிம் தலை காட்டுவதும் உண்டு.

இந்தநிலையில், கடந்த ஓராண்டாக, “எங்கள் நாட்டில் கொரோனா தொற்று இல்லை. வைரஸால் யாரும் பாதிப் படையவில்லை” எனத் தொடர்ந்து உலக சுகாதார அமைப்பிடம் கூறிவருகி றது வட கொரியா.

**கொரோனா ஆரம்பகால ஆட்டத்தில் வட கொரியா**

கொரோனா வைரஸ் பரவத் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே மிகத் தீவிரமான கட்டுப்பாடுகளை விதித்து தன்னைத் தானே தனிமைப்படுத்திக் கொண்டது வட கொரியா. சீனா உள்ளிட்ட அண்டை நாடுகளுடனான தனது எல்லைகளை மூடியது, அரசு முறைப் பயணங்களுக்குக் கடும் கட்டுப்பாடு விதித்தது, வெளிநாடுகளிலிருந்து வட கொரியா திரும்பிய பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட தனது நாட்டு மக்களை தனிமைப்படுத்தி கண்காணித்தது. இவற்றையெல்லாம் உற்றுநோக்கும் போது வடகொரியா சொல்வதில் உண்மை இருப்பது போன்று தோன்றினாலும் இல்லை என மறுக்கிறார் எட்வின்.

**“தகவல் இல்லை... அதனால் கொரோனா இல்லை”**

உலக சுகாதார அமைப்பின் வட கொரியாவுக்கான பிரதிநிதியாக இருக்கும் எட்வின் சல்வடார் (Edwin Salvador), ஹதி அசோசியேட் பிரஸ்“ (The Associated Press) செய்தி நிறுவனத்துக்கு அனுப்பிய மின்னஞ்சலில், “வட கொரியாவில் 2020ஆம் ஆண்டு, ஏப்ரல் முதலாம் திகதி 23,121 பேரை தனிமைப்படுத்தி, கொரோனா பரிசோதனை செய்யப்பட்டு பின் தொற்று இல்லை என்று உறுதியானதும் அரசால் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் 2020, மார்ச் 26ஆம் திகதி முதல் ஏப்ரல் முதலாம் திகதி வரை பரிசோதனை செய்யப்பட்ட 732 பேருக்கான சோதனை முடிவுகளை அரசு வெளியிடவில்லை” என்றார். மேலும் “இதுவரையில் எத்தனை பேர் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள், எத்தனை பேருக்கு கொரோனா அறிகுறி உள்ளது போன்ற எந்தத் தகவலையும் எங்களிடம் (உலக சுகாதார அமைப்பிடம்) அரசு கூற மறுக்கிறது” என்று அதில் தெரிவித்திருக்கிறார்.

**உண்மையில் என்ன நடக்கிறது வட கொரியாவில்?**

உலகின் மிகப்பெரிய ராணுவத்தில் ஒன்றான கொரிய ராணுவம் கிட்டத்தட்ட பத்து லட்சம் ராணுவ வீரர்களைக்கொண்டிருக்கிறது. இருப்பினும் “முறையான இருப்பிட வசதிகளோ, சத்தான உணவுப்பழக்க வழக்கங்களோ இல்லாமல் கொரிய ராணுவ வீரர்கள் ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் இருக்கிறார்கள். இது போன்று நோய் எதிர்ப்பு சக்தி திறன் குறைந்த, எல்லையில் வீரர்களுக்கு கொரோனா தொற்று பரவியிருந்தால் அது வட கொரியாவுக்கு மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும். எனவே, வடகொரியா தனது பலவீனத்தை மறைப்பதற்காகவே கொரோனா பரவல் இல்லை என்று கூறுகிறது” என வட கொரிய ராணுவத்திலிருந்து வெளியேறிய ராணுவ வீரர் ஜூங் ஹானேயில், VAO எனும் பத்திரிகைக்கு கொரோனா பரவிய ஆரம்ப காலத்திலே தனது சந்தேகத்தைப் பதிவுசெய்திருந்தார்.

மேலும், கொரோனா இல்லை என்று சொல்லும் வட கொரியா கடந்த பெப்ரவரி மாதம் வரை சுமார் 19 லட்சம் கொரோனா தடுப்பூசிகளை ஐ.நா வின் கொரோனா நோய் தடுப்புத் திட்டத்தின் மூலம் பெற்றிருப்பதாக ஐ.நா. தெரிவிக்கிறது. கொரோனா அச்சம் காரணமாக, வருகிற ஜூலை 23ஆம் திகதி ஜப்பானில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும் கலந்துகொள்ளப்போவதில்லை என தெரிவித்திருக்கிறது வட கொரியா.

போதிய சுகாதாரக் கட்டமைப்பு வசதிகள் இல்லாத வட கொரியாவில் கொரோனா இல்லை என்று சொல்வதை பெரும்பாலான உலக நாடுகள் நம்பத் தயாராக இல்லை என்பதே நிதர்சனம். ●

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை - 1 நேரம் - 45 நிமிடம்
வினாத்தாள் II ஆசிரியர் - மு.வே.அன்பழகன்

கல்வி tv CHANNEL

14) 9784 இல் இருந்து 587 ஐக் கழியுங்கள் ..........................................

15) ஒரு போத்தலில் உள்ள நீரின் அளவு 350 ml ஆகும். அத்தகைய 6 போத்தல்களில் உள்ள நீரின் அளவு யாது? ..............................................................

17) **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) சக்தி தரும் உணவு
1. பயறு 2. பலாக்காய் 3. வல்லாரை 4. கருவாடு

2) பின்வருவனவற்றுள் முட்டையிட்டு இனம்பெருக்குவது அல்லாதது
1. ஆமை 2. முதலை 3. பல்லி 4. அணில்

3) அரச இலச்சினையில் தர்மச்சக்கரம், நெற்கதிர் என்பன குறித்து நிற்பவை முறையே
1. நிலைத்திருப்பு, சௌபாக்கியம் 2.சௌபாக்கியம், தன்னிறைவு
3. தார்மீகம், தன்னிறைவு 4. தன்னிறைவு, நிலைத்திருப்பு

4) இரவில் நடமாடும் பறக்கும் முலையூட்டி
1. ஆந்தை 2. ஆட்காட்டி 3. சாக்குருவி 4. வௌவால்

5) சர்வதேச சிறுவர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?
1. ஒக்டோபர் 1 2. நவம்பர் 1 3. டிசம்பர் 10 4. டிசம்பர் 25

6) முட்கள் கொண்ட தாவரப்பகுதி எது?
1. கொவ்வை, முல்லை 2. தாதுவளை, இலந்தை
3. றோசா, துளசி 4. பாகல், செவ்வந்தி



7) வலைப்பந்தாட்டத்தில் ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை
1. 6 2. 11 3. 7 4. 10

8) சிவப்பு நிறத்தையும் நீல நிறத்தையும் சம அளவில் ஒன்றாகக் கலக்கும் போது தோன்றும் நிறமாக அமைவது
1. செம்மஞ்சள் 2. ஊதா 3. பச்சை 4. இளஞ்சிவப்பு

9) நுளம்பினால் பரவும் நோயாக அமைவது
1. யானைக்கால் 2. வாந்திபேதி 3. செங்கண்மாரி 4. நீரிழிவு

10) காந்தத்தைக் கவராத பொருள் யாது?
1. குண்டூசி 2. பிளாஸ்ரிக் முடி 3. ஆணி 4. தையல் ஊசி

11) சூரிய நமஸ்காரப் படிமுறையில் 3ஆம் படிமுறையாக அமைவது

1.  2.  3.  4. 

12) பின்வருவனவற்றில் எது சிறுவர் உரிமை மீறப்படும் சந்தர்ப்பமாக அமையாதது
1. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் 2. சிறுவர்களைத் துன்புறுத்துதல்
3. பாடசாலை சென்று கல்வி கற்பதைத் தடுத்தல் 4. சிறுவர்கள் கல்வி கற்பதற்கு சூழலை ஏற்படுத்தல்

13) பின்வருவனவற்றில் பிராணிகளில் மாமிச உணவுகளை மட்டும் உண்பவை
1. நாய், பூனை 2. நரி, முயல் 3. பல்லி, தவளை 4. குதிரை, யானை

14) இலங்கைத் தேசிய இலச்சினையில் நிறைகுடம் குறித்து நிற்பது
1. சௌபாக்கியம் 2. தார்மீகம் 3. தூய்மை 4. தன்னிறைவு

15) இரவில் இலைகள் சுருங்கும் தாவரம்
1. றோசா 2. பொன்னொச்சி 3. அகத்தி 4. குப்பைமேனி

16) குப்பை கூளங்கள், மரம் போன்றவற்றை உக்கச்செய்து சூழலுக்கு நன்மை பயக்கும் பிராணி
1. மண்புழு 2. கறையான் 3. காகம் 4. தேனீ

17) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ளும் பிராணியாக அமையாதது?
1. கடலாமை 2. நத்தை 3. இறால் 4. ஆமை

18) கூர்மையான பார்வைத்திறன் கொண்ட பறவைகள்
1. காகம், கிளி 2. வாத்து, பருந்து 3. மைனா, குயில் 4. ஆந்தை, தவளை

19) அசுத்த நீரைப்பருகுவதால் ஏற்படத்தக்க நோய்
1. டெங்குக்காய்ச்சல் 2. மலேரியா 3. சிக்குன்கூனியா 4. வாந்திபேதி

20) இலங்கையில் பெரிய இயற்கைத்துறைமுகம் அமைந்துள்ள மாவட்டம்
1. கொழும்பு 2. காலி 3. ஒலுவில் 4. திருகோணமலை

21) தேசியக்கொடியில் தேசிய ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் நிறம்
1. பச்சை 2. சிவப்பு 3. மஞ்சள் 4. செம்மஞ்சள்

22) சிறுவர்களுக்கெதிரான துஷ்பிரயோகம் இடம்பெறும் சந்தர்ப்பம் ஒன்றில் அழைக்க வேண்டிய தொலைபேசி எண்
1. 1929 2. 1919 3. 1939 4. 1938

23) இளஞ்சிவப்பு நிறத் தளிர்களை உருவாக்கும் தாவரம்
1. எலுமிச்சை 2. நாகமரம் 3. வெற்றிலை 4. பலா

24) ஒரு வித்தினை மாத்திரம் கொண்ட பழம்
1. நெல்லி 2. விளாம்பழம் 3. மங்குஸ்தான் 4. மாதுளை

25) தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் விலங்கு
1. ஆந்தை 2. பருந்து 3. வண்ணத்துப்பூச்சி 4. நத்தை

26) இலங்கைக்குக் கிழக்கே காணப்படும் நாடு
1. மலேசியா 2. இந்தியா 3. இங்கிலாந்து 4, கிரீஸ்

27) பின்வரும் எந்த விளையாட்டில் கைக்கவசம், காற்கவசம் என்பன அணியப் படுகிறது?
1. எல்லே 2. கரப்பந்து 3. கிரிக்கெற் 4. பற்மின்டன்

28) இலங்கையில் காணப்படும் வணக்கத்துக்குரியது அல்லாத வரலாற்றுப் பிரசித்திபெற்ற இடம்
1. ருவன் வெலிசாய 2. காலிக்கோட்டை 3. சிவனொலிபாதமலை 4. தூபாராமை

# ஏப்ரலில் 1,959 வீதி விபத்துக்கள்: 205 பேர் பலி! 1,254 பேர் காயம்

கொழும்பு,மே 05

**நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் பதிவான வீதி விபத்துக்களால் 205 பேர் உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.**

இதேவேளை, இந்தக் கால கட்டத்தில் 1,959 வீதி விபத்துக்கள் இடம்பெற்றதுடன், அதில் சிக்குண்டு காயமடைந்தவர்களின் எண்ணிக்கையும் 1,254 ஆக பதிவாகியது.

இந்த ஆண்டில் அதிகளவான விபத்துக்கள் ஏப்ரல் மாதத்திலேயே இடம்பெற்றதுடன், அவற்றில் பெரும்பாலான விபத்துக்கள் மேல் மாகாணத்தில் பதிவாகின.

இதன்படி மேல் மாகாணத்தில் 768 விபத்துக்களும், வடமேல் மாகாணத்தில் 238 விபத்துக்களும் இடம்பெற்றன.

கடந்த ஏப்ரல் மாதத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்களும் அதிகளவில் விபத்தில் சிக்குண்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (எ)



# பருத்தித்துறையில் 95 கிலோ கஞ்சா கடத்தல் முறியடிப்பு!

## ஒருவர் கைது, வான் பறிமுதல்

யாழ்ப்பாணம்,மே 05

பருத்தித்துறையில் 95 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா போதைப்பொருளை வான் ஒன்றில் கடத்திச்செல்ல முற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

பருத்தித்துறை சுப்பர்மடம் மயானத்துக்கு முன்பு இந்தக் கைது நடவடிக்கை நேற்றுச் செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணிக்கு இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மயானத்துக்கு முன்பு வான் ஒன்றில் கஞ்சா பொதிகளை ஏற்ற முற்பட்ட போது, பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்தனர். மற்றொரு நபர் தப்பியோடியுள்ளார்.

45 பொதிகளில் 95 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. கடத்தலுக்குப் பயன்படுத்திய வானும் பறிமுதல் செய்யப்பட்டது என பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.(எ-03)

# திருமலையில் கேரள கஞ்சாவுடன் இளைஞன் கைது

திருகோணமலை,மே 05

திருகோணமலையில் கேரளக் கஞ்சாவுடன் 23 வயது இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

அநுராதபுர சந்தியிலிருந்து ஓட்டோவில் ஒரு கிலோ 90 கிராம் கேரளக் கஞ்சாவை கொட்பே பகுதிக்கு விற்பனை செய்வதற்காகக் கொண்டு சென்றபோதே சீனக்குடா பொலிஸார் பறிமுதல் செய்தனர். (எ)

# ரிஷாத் பதியுதீனை விடுவிக்கக் கோரி மனைவி ஆயிஷா ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு,மே 05

எனது கணவரான ரிஷாத் பதியுதீன் 20 வருடகாலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதுடன் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றியும் வருகின்றார். அவருக்கும் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களுக்கும் தொடர்பிருப்பதாக இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை. எனவே அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆயிஷா ரிஷாத், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆயிஷா ரிஷாத், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

எனது கணவர் ரிஷாத் பதியுதீன் சட்டத்திற்கு முரணாகக் கைதுசெய்யப்பட்டமையால் நானும் எனது பிள்ளைகளும் மிகுந்த வேதனைக்கு உள்ளாகியிருக்கிறோம். ரமழான் மாதமான ஏப்ரல் 24 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில் சடுதியாகக் குற்றவிசாரணைப்பிரிவினர் எமது வீட்டுக்குள் நுழைந்தது எனது கணவரை கைதுசெய்தனர்.

கைது செய்தமைக்கான காரணங்கள் எதனையும் அவர்கள் அப்போது கூறவில்லை. பின்னர் எனது கணவர் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்தபோது அவருக்கும் அமைச்சின் மேலதிக செயலாளராகப் பணியாற்றிய பாலசுப்ரமணியம் என்பவருக்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல்கள் பற்றிய விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்று அறிந்தோம். அத்தோடு பாலசுப்ரமணியத்துக்கு இன்சாப் அஹமட் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

எனது கணவர் 20 வருடகாலமாக பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதுடன் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றியும் வருகின்றார். அவருக்கும் உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்களுக்கும் தொடர்பிருப்பதாக இதுவரையில் நிரூபிக்கப்படவில்லை.

இந்நிலையில், நீதிமன்ற உத்தரவின்றி அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருப்பது எவ்வகையிலும் நியாயமான விடயமல்ல என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அது மாத்திரமன்றி அவர் விசாரணைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வந்த நிலையில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டமையும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும்.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையில், ஞானசார தேரரின் செயல்பாடுகளும் குண்டுத்தாக்குதல்களுக்குப் பிரதான காரணமாக அமைந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அவரோ அல்லது இதற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்கள் என்று இனங்காணப்பட்டவர்களோ இன்னமும் கைதுசெய்யப்படவோ, விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவோ இல்லை. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு எனது கணவரையும் அவரது சகோதரரையும் விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# கொரோனாவை கட்டுப்படுத்துவதில் அரசியல் தீர்மானங்கள் வேண்டாம்

## நளிந்த ஜயதிஸ்ஸ கோரிக்கை

கொழும்பு,மே 05

கொரோனா பரவல் தற்போது எல்லை மீறிச்சென்றுள்ளது. எனவே, இனியாவது இவ்விடயத்தில் அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுக்காது, தொற்று நோயியல் நிபுணர்கள் உள்ளிட்ட சுகாதாரத் தரப்பினரின் அங்கத்துவம் வகிக்கின்ற குழுவொன்றை நியமித்து தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பினை அவர்களிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



ஜே.வி.பி. தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

ஏப்ரல் 8 ஆம் திகதி இலங்கையில் புதிய வகை வைரஸ் சிறிஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தால் இனங்காணப்பட்டு சுகாதார அமைச்சுக்கும் அரசாங்கத்துக்கும் அறிவிக்கப்பட்டது.

அறிவிப்பு கிடைத்த பின்னர் அதுதொடர்பில் அரசாங்கம் என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்தது? இந்த வைரஸ் தாக்கத்தால் இளைஞர்கள் பலரும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது நிலைமை தீவிரமடைந்துள்ளது. எனவே, இனியாவது இவ்விடயத்தில் அரசியல் தலையீடுகளுடன் தீர்மானங்களை எடுக்காமல், தொற்று நோயியல் பிரிவின் பிரதானிகள் உள்ளிட்ட சுகாதாரத் தரப்பினர் அடங்கிய குழுவிடம் தீர்மானம் எடுக்கும் பொறுப்பை ஒப்படைக்குமாறு வலியுறுத்துகின்றோம். தொற்று நோய்ப் பிரிவு என்பது அரசாங்கத்துக்கு ஏற்ப செயல்படுவதல்ல. அதனைச் சுயாதீனமாக இயங்குவதற்கு இடமளிக்க வேண்டும்.

தற்போது கொரோனா கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே துறையில் விஷேட நிபுணத்துவம் உடையவராவார். ஆனால், அவரால் முன்வைக்கப்படுகின்ற யோசனைகள் ஏனைய அரசியல்வாதிகளால் தோற்கடிப்பட்டுள்ளன. இவ்வாறான செயல்பாடுகளால் தான் அதிருப்தியடைந்துள்ளதாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, அரசாங்கத்தின் பேச்சாளரைப் போன்று செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார். உண்மையில் இராணுவத்தளபதிக்கு உயர் மட்டத்திலுள்ள பாதுகாப்பு பிரதானியான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே உத்தரவிடுகின்றார். எனவே இராணுவத்தளபதியை அவருக்கு உரிய பணியில் மாத்திரம் ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கொரோனா கட்டுப்பாடு தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு தொற்று நோயியல் நிபுணர்கள் அடங்கிய முன்னிலை சுகாதார அதிகாரிகளை உள்ளடக்கிய பொறிமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். இதனையே முதலாம் அலை ஏற்பட்ட காலத்திலிருந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். நிலைமை தீவிரமடைந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் கூட 24 மணித்தியாலங்களுக்குள் முடிவுகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பி.சி.ஆர். பரிசோதனை கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

இது மாத்திரமின்றி மேலதிக ஒட்சிசன் உற்பத்தி, தீவிர சிகிச்சைப் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் உள்ளிட்ட சகல விடயங்களிலும் அரசாங்கம் உரிய தீர்வுகளை எடுக்க வேண்டும். அத்தோடு தொற்று நோயியல் நிபுணர்கள் உள்ளடங்கிய சுகாதாரத் தரப்பினர் அடங்கிய குழுவொன்றிடம் கொரோனா தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான பொறுப்பை ஒப்படைக்குமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம்- என்றார். (எ)

# 24 மணிநேரத்தில் 218 பேர் கைது

கொழும்பு,மே 05

தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 218 பேர் கைதுசெய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 5,075 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

தற்போதைய தடை உத்தரவுகளை மீறி நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் நபர்கள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தியுள்ளதாகவும், இவ்வாறு அடையாளம் காணப்படும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் கூறினர்.

பிராந்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இதுதொடர்பில் பொலிஸ் தலைமையகம் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. (எ)

# பில் கேட்ஸ் விவாகரத்து



வொஷிங்ரன், மே. 05

பில் கேட்ஸ் மற்றும் மெலிண்டா கேட்ஸ் திருமணமான 27 வருடங்களுக்குப் பிறகு விவாகரத்து செய்ய முடிவு செய்துள்ளதாகக் கூறியுள்ளனர்.

பில் கேட்ஸ் மற்றும் எழுத்தாளரும் வணிகப் பெண்ணுமான மெலிண்டா கேட்ஸ், தங்கள் தனிப்பட்ட ருவிட்டர் கணக்குகளில் வெளியிடப்பட்ட ஒரே மாதிரியான அறிக்கையில் விவாகரத்து முடிவை அறிவித்தனர்.

“கடந்த 27 ஆண்டுகளில், நாங்கள் மூன்று குழந்தைகளை வளர்த்துள்ளோம், உலகெங்கிலும் வேலை செய்யும் ஓர் அடித்தளத்தை உருவாக்கியுள்ளோம், இது அனைத்து மக்களையும் ஆரோக்கியமான, உற்பத்தி நிறைந்த வாழ்க்கையை நடத்த உதவுகிறது” என்று அந்த பதிவில் கூறியுள்ளனர்.

“நாங்கள் தொடர்ந்து அந்த நோக்கத்தில் ஒரு நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்கிறோம், எங்கள் தொழில் வாழ்க்கையை இணைந்தே தொடருவோம், ஆனால் எங்கள் தனிப்பட்ட வாழ்க்கையின் அடுத்த கட்டத்தில் ஒரு ஜோடியாக நாங்கள் ஒன்றாக வாழ முடியும் என்று நாங்கள் இனி நம்பவில்லை.” என்றும் தெரிவித்துள்ளனர்.

# அவசர மருத்துவ உதவிப் பொருட்களுடன் 5ஆவது விமானம் இந்தியா வந்தடைந்தது!

புதுடில்லி, மே 05

அமெரிக்காவில் இருந்து அவசர மருத்துவ உதவிப் பொருட்களுடன் கடந்த 5 நாட்களில் ஐந்தாவது விமானம் நேற்று இந்தியாவை வந்தடைந்தது.

இந்த விமானத்தில் 500 க்கு மேற்பட்ட ஒட்சிசன் செறிவூட்டல் கருவிகள், ஒரு இலட்சம் என்-95 முக கவசங்கள் உள்ளிட்ட மருத்துவ உதவிப் பொருட்கள் எடுத்து வரப்பட்டன.

கொரோனா வைரஸ் தொற்று நோய் இரண்டாவது அலையில் சிக்கி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவிற்கு தேவையான மருத்துவ உதவிகள் வழங்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொரோனா பேரிடரின் தொடக்க காலத்தில் இந்தியா உதவி செய்தது போல, இந்தியாவுடன் அமெரிக்கா துணை நிற்கும் எனவும் ஜோ பைடன் தெரிவித்திருந்தார்.

அதன்படி இந்தியாவுக்கு அமெரிக்கா தொடர்ந்து அவசர மருத்துவ உதவிப் பொருட்களை வழங்கி வருகின்றது.

# கொரோனா இரண்டாவது அலையால் 70 லட்சம் இந்தியர்கள் வேலை இழப்பு!

புதுடில்லி, மே. 05

இந்தியாவில் கொரோனா வைரஸ் இரண்டாவது அலையை அடுத்து பல பகுதிகளில் கடந்த மாதம் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு காரணமாக சுமார் 70 இலட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக இந்திய பொருளாதார கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் வேலையின்மை மார்ச் மாதத்தில் 6.5 வீதத்திலிருந்து 7.97 வீதமாக அதிகரித்துள்ளது என இந்திய பொருளாதார கண்காணிப்பு அமைப்பு தரவுகள் கூறுகின்றன.

முடக்க நிலை காரணமாக புதிய வேலைவாய்ப்புக்கள் குறைந்து வருகின்றன. மே மாதத்தில் இந்த நிலை மேலும் மோசமாகி வேலையின்மை வீதம் மேலும் அதிகரிக்கலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்று நோய் முதல் அலையின்போது மாதக் கணக்கில் நீடித்த கடுமையான சமூக முடக்கல் காரணமாக மில்லியன் கணக்கான இந்தியர்கள் வேலையிழந்தனர்.

அத்துடன், உள்நாட்டு உற்பத்தியும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டாவது அலையின்போது இறுதிக் கட்ட முயற்சியாகவே முடக்க நிலையை அமுல்செய்ய வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி மாநில அரசுகளைக் கோரி வருகிறார்.

எனினும் தொற்று நோயாளர் தொகை தீவிரமாக அதிகரிப்பதுடன், மரணங்களும் அதிகளவில் பதிவாகும் நிலையில் பல மாநிலங்கள் பகுதி அளவில் ஊரடங்கு உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன.

இந்நிலையில் கொரோனா வைரஸின் எழுச்சி மற்றும் அதனால் ஏற்பட்டுள்ள முடக்க நிலையால் இந்திய உற்பத்தித் துறை பாதக்கப்பட்டுள்ளது. இதனால் அதிகளவானவர்கள் வேலை இழந்துள்ளதுடன், பொருளாதாரத்தில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனவும் இந்திய பொருளாதார கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

# சட்டவிரோத பயணங்களின் நடுவே பாரிஸில் அந்தரிக்கும் இந்தியர்கள்

## விமான நிலையத்தில் விசேட தரிப்பிட வசதி

பாரிஸ், மே 05

ஐரோப்பா ஊடாகச் சட்டவிரோதமாகப் பயணிக்கும் இந்தியப் பயணிகள் பலர் பாரிஸ் விமான நிலையத்தில் தரித்துச் செல்வதால் அவர்களைக் கண்காணிக்கும் நோக்கில் விசேட தரிப்பிட வசதிகள் அங்கு செய்யப்பட்டுள்ளன என்று தகவல் வெளியாகி உள்ளது.

பிரான்ஸ் எல்லைகள் ஊடாகப் பயணிக்கின்ற இந்தியர்கள் காத்திருப்பதற்கான விசேட தங்குமிட வசதிகள் பாரிஸ் விமான நிலையத்தின்“ முனையம் 2A' (terminal 2A) இல் செய்யப்பட்டுள்ளன என்று அதிகாரிகளை ஆதாரம் காட்டி ஏ.எவ்.பி செய்தி தெரிவிக்கிறது.

கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மத்தியிலும் இந்தியர்கள் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குப் பயணிப்பது அதிகரித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொஸ்கோ - மெக்ஸிக்கோ இடையே சட்டவிரோதமாகப் பயணித்து வட அமெரிக்காவில் குடியேற விரும்பும் இந்தியர்கள் பலர் பாரிஸ் விமான நிலையத்தில் தரித்துச் செல்கின்றனர் என்றும் அவ்வாறு பயணம் செய்வோர் டசின் கணக்கில் விமான நிலையத்தில் தங்குவதால் பெரும் வைரஸ் கொத்தணிகள் உருவாகி விடலாம் எனவும் அஞ்சப்படுகிறது.




சுமார் 90 இந்தியப் பயணிகள் தற்சமயம் பாரிஸ் விமான நிலையத்தில் மாறிச் செல்வதற்காக காத்திருக்கின்றனர். அவர்களில் பலர் காலாவதியாகிய வைரஸ் பரிசோதனை சான்றிதழ்களையே வைத்திருக்கின்றனர் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

தங்களை வைரஸ் பரிசோதனைக்கு உட்படுத்த அவர்கள் மறுப்புத் தெரிவித்து வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது.

பிரான்ஸுக்கு வருகின்ற இந்தியப் பயணிகள் உட்பட சில நாடுகளைச் சேர்ந்தோர் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

விமானங்கள் மாறிச் செல்வோர் விமான நிலையத்தில் காத்திருக்கும் பகுதிகளிலேயே தங்கி நிற்கின்றனர். பயணிகள் வரவு குறைந்ததால் விமான நிலையத்தின் காத்திருக்கும் பிரிவுகள் சமீப நாட்களாக வெறிச் சோடியுள்ளன. ஆனால் இந்தியப் பயணிகள் பலர் இன்னமும் காத்திருப்போர் பிரிவில் தங்கியுள்ளனர். அத்தகையோருக்கே படுக்கை மற்றும் சுகாதார வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் பலரிடம் வீஸா ஆவணங்கள் இல்லாததால் மொஸ்கோவுக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர் என்று செய்தி வெளியாகி உள்ளது.



# ரயில் பாலம் இடிந்து விழுந்து மெக்ஸிக்கோவில் 15 பேர் பலி!

மெக்ஸிக்கோ சிற்றி, மே 05

மெக்ஸிக்கோ நாட்டில் ரயில் சென்றுகொண்டிருந்த போது மெட்ரோ ரயில் பாலம் இடிந்து விழுந்து இடம்பெற்ற விபத்தில் குறைந்தது 15 பேர் உயிரிழந்தனர். மேலும் 70 பேர் வரை காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரயில் பாலம் இடிந்து விழுந்தவேளை, கீழே வாகனங்கள் பயணம் செய்துகொண்டிருந்தன. பாலம் மேலே விழுந்ததில் அவ்வழியாக சென்ற கார் ஒன்று முற்றாக நசிந்து சிதைவடைந்தது.

உள்நாட்டு நேரப்படி நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் தப்பிப் பிழைத்தவர்களை மீட்புப் பணியாளர்கள் மற்றும் தீயணைப்புத் துறையினர் தேடி மீட்டு மருத்துவமனைகளுக்கு அனுப்பினர்.

காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இறப்பு எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மெட்ரோ ரயில் பாலம் மெக்ஸிக்கோ நகர மேயராக தற்போதைய வெளியுறவு அமைச்சர் மார்சலோ இபார்ட் இருந்தபோது கட்டப்பட்டது. இந்நிலையில் இந்த விபத்துக் கொடூரமானது. இறந்தோர், காயமடைந்தோர் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறேன் என மார்சலோ இபார்ட் தனது ருவிட்டரில் தெரிவித்துள்ளார். (அ)

# நேபாளத்தில் நம்பிக்கை வாக்கு கோரும் பிரதமர்!



காத்மண்டு, மே 05

நேபாளத்தில் ஆளும் கட்சிக்குள்அதிகார மோதல் ஏற்பட்டதையடுத்து, பாராளுமன்றத்தைக் கலைக்குமாறு அதிபர் வித்யாதேவி பண்டாரிக்கு கடந்த ஆண்டு டிசம்பர் 20ஆம் திகதி பிரதமர் கே.பி. சர்மா ஒளி பரிந்துரை செய்தார். இதை ஏற்று, பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த அந்நாட்டு உயர்நீதிமன்றம், அதிபரின் உத்தரவை ரத்து செய்தது.

இந்நிலையில், அமைச்சரவை கூட்டம் ஞாயிறு நடைபெற்றது. இதில் வரும் 10ஆம் திகதி நம்பிக்கை வாக்கு கோரப் போவதாக பிரதமர் தெரிவித்தார். பிரதமரின் பரிந்துரையை ஏற்று பாராளுமன்றத்தைக் கூட்ட அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

ஈழநாடு



# சட்ட ஆட்சி, நீதிமன்ற சுயாதீனம் இலங்கையில் வலுவிழக்கக்கூடும்

## எச்சரிக்கிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

**கொழும்பு, மே 05**

**அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள விடயங்களை நடைமுறைப் படுத்துவதால் சட்டத்தின் ஆட்சியும் நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையும் மேலும் வலுவிழக்கக்கூடும். அதேவேளை, மனித உரிமை மீறல் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட அதிகாரிகளை விடுவிப்பதற்கு ஏதுவான வகையில் செயல்படுவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

இது குறித்து மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

மனித உரிமை மீறல் சம்பவங்களில் தொடர்புபட்ட அதிகாரிகளை விடுவிப்பதற்கும் அவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸ் அதிகாரிகளைத் தண்டிப்பதற்கும் ஏற்புடைய வகையிலான தீர்மானத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் நிராகரிக்க வேண்டும்.

கடந்த ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்படுவதென்பது ஏற்கனவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் கீழ் வலுவிழந்துள்ள நீதிமன்றத்தின் சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றை மேலும் தொய்வடைச்செய்யும்.

இந்தத் தீர்மானமானது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் கடந்த 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நிறுவப்பட்ட அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்யும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது.

இது மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் உள்ளிட்ட குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளை முடக்குவதுடன் ஊழல்மோசடிகள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதிலிருந்து ராஜபக்ஷ குடும்பத்தையும் ஏனையோரையும் பாதுகாக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயற்பாடுகள் அவரது குடும்பத்தினருக்கு உதவும் வகையிலேயே அமைந்துள்ளன. ராஜபக்ஷ, தான் தொடர்புபட்டிருப்பது உள்ளடங்கலாக பல்வேறு மோசமான குற்றங்களை மறைப்பதற்காக முன்னெடுக்கக்கூடிய எந்தவொரு முயற்சியையும் அவர் விட்டுவைக்கவில்லை.

குற்ற விசாரணைப்பிரிவின் அதிகாரிகளான ஷானி அபேசேகர, நிஷாந்த சில்வா உள்ளடங்கலாக மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணை அதிகாரிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேற்படி ஆணைக்குழு அச்சுறுத்தியுள்ளது.

அதுமாத்திரமன்றி ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த அறிக்கையின் விளைவாக நாட்டில் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதிமன்றத்தின் சுயாதீனத்துவம் ஆகியவை வலுவிழக்கலாம் என்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வினைத்திறனான செயல்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

2008 - 2009 வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற வலிந்து காணாமலாக்கல் சம்பவங்கள், கடற்படையின் சில உறுப்பினர்கள் தொடர்புபட்டிருப்பதாக சந்தேகிக்கப்படும் 11 மாணவர்கள் கொலைச்சம்பவம் ஆகியவை குறித்து இடம்பெறும் சட்டவிசாரணைகளை முடக்குவதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டது.

மேலும் 2008 ஆம் ஆண்டு ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தப்பட்டு தாக்கப்பட்டமை, 2009 ஆம் ஆண்டு சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டமை, 2010 ஆம் ஆண்டில் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை, 2012 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வெலிக்கடை சிறைச்சாலை படுகொலைகள் ஆகியவை பற்றிய விசாரணைகளும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

இந்த வழக்குகள் குறித்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆதாரங்கள், அச்சம்பவங்கள் நடைபெற்றபோது தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராகப் பதவி வகித்தமை தொடர்பில் சுட்டிக்காட்டுகின்றன.

இந்த வழக்குகளில் காணப்பட்ட அரசியல் தலையீடுகள், ஏற்கனவே இவற்றுக்கான நீதிவழங்கல் பொறிமுறைகளைத் தாமதப்படுத்திவிட்டது. பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்கள் தண்டனைகளிலிருந்து தப்பிப்பதற்கு அனுமதிப்பதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக அதன் கடப்பாடுகளைப் பேண வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# தனியார்துறை நிறுவனங்களில் சுகாதார குழுக்கள் அமையுங்கள்

கொழும்பு, மே. 05

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தொழிலாளர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு தனியார்துறை நிறுவனங்களில் சுகாதாரக் குழுக்களை அமைக்குமாறு தொழில் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்தடன், இது தொடர்பாக தொழில் திணைக்கள அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவது குறித்தும் தொழில் ஆணையாளர் நாயகம் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டோருக்கான கொடுப்பனவுகளை செலுத்துவது குறித்து தெரிவித்துள்ள அவர், தொழில் அமைச்சர், தொழிற்சங்கத்தினர் மற்றும் முதலாளிமார் ஆகியோர் முன்னர் மேற்கொண்ட தீர்மானத்தைச் செயற்படுத்தலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் மார்ச் கொரோனா வைரஸ் தொற்று இலங்கையில் ஆரம்பமானது முதல் 2021 ஏப்ரல் வரை 12 ஆயிரம் முதல் 14 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என தொழில் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், அவர்களில் 11 ஆயிரம் பேருக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுத்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# மரண அறிவித்தல்

மலர்வு 26 - 08 - 1944



உதிர்வு 02 - 05 - 2021

## திரு. சின்னராசா பொன்னம்பலம்

யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Schwerte ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா பொன்னம்பலம் அவர்கள் 02-05-2021 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஷ்வரி அவர்களின் அன்புக் கணவரும்,பவானி (ஜேர்மனி), ரமேஸ்குமார் (கனடா), நந்தினி (சுவிஸ்), ராஜ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும்,சசிகலா (கனடா), தர்மினி (ஜேர்மனி), சண்முகதாஸன் (ஜேர்மனி), யோக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராசலிங்கம், பரமேஷ்வரி, காலஞ்சென்ற கமலாதேவி, சண்முகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான மகேஷ்வரி, சண்முகராசா மற்றும் விமலராணி, துரைவீரசிங்கம், பூமணி, காலஞ்சென்ற கணேச பிள்ளை, கனகலிங்கம், பத்மலோஜனி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சஜித்தன், சகான், பவித்திரா, சகானா, அபினாஷ், தர்சனா, ரதுஷன், ரஷ்மினி, ரஷ்மிநன், ரஷ்மிகா, பிரிஜந்தன், சங்கீதன், நிஜானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**முக்கிய அறிவித்தல்:** மரணச்சடங்கில் 30 பேர் மட்டுமே பங்கு பெறலாம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு:**

**சண்முகதாஸன் - மருமகன் : 004917663879616**
**ராஜ்குமார் - மகன் : 004917632363924**
**சஜித்தன் - பேரன் : 004915152571695**
**சகான் - பேரன் : 004916094690099**
**சகான் - பேரன் : 004916094690099**
**சஜித்தன் - பேரன் : 004915152571695**
**ராஜ்குமார் - மகன் : 004917632363924**
**சண்முகதாஸன் - மருமகன் : 004917663879616**

# பி.சி.ஆர் சோதனை அதிகரிப்பு

கொழும்பு, மே 05

நாட்டில் அண்மைக்காலமாகக் கொரோனாத் தொற்றானது தீவிரமடைந்து வருகின்றது.

இந் நிலையில் பி.சி.ஆர் பரிசோதனைகளையும், வைத்தியசாலைகளிலுள்ள படுக்கைகளையும் அதிகரிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக பெருந்தோட்ட அமைச்சரும், அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளருமான டாக்டர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

# இரு சிறுவர்கள் உட்பட மூவர் நீரில் மூழ்கி பலி

கொழும்பு, மே 05

திவுலப்பிட்டி- ஹல்பே -மனம்பெல்ல பிரதேசத்தில் பாதுகாப்பற்ற முறையில் காணப்பட்ட நீர் நிறைந்த குட்டையில் வீழ்ந்து பெண்ணொருவரும் சிறுவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களுள் 42 வயதான தாயும், 10 வயதான அவரது மகனும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உயிரிழந்த மற்றையவர், மேற்படி நபர்களின் வீட்டுக்கு அருகாமையிலுள்ள வீடொன்றில் வசித்துவந்த 9 வயது சிறுமி ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கீரை பறிக்க சென்றபோது அவர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர்.

# துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூல விவாதம் 18ஆம், 19ஆம் திகதிகளில்

கொழும்பு, மே 05

துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான விவாதம் எதிர்வரும் 18யஅம்,19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இன்று இந்த விவாதம் நடத்தப்பட திட்டமிடப்பட்டிருந்த போதும், துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பான உயர்நீதிமன்ற வியாக்கியானம் இதுவரை சபாநாயகருக்கு அறிவிக்கப்படாததை தொடர்ந்து, நேற்று முற்பகல் கட்சி தலைவர்கள் கூடி இந்த விவகாரத்தை ஆராய்ந்தனர்.

இதையடுத்து, 18ஆம், 19ஆம் திகதிகளுக்கு விவாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஈழநாடு

# புத்தாண்டு கொத்தணி மூலம் அரசு வெளிப்படுத்த விரும்புவது என்ன?

## பிமல் ரத்நாயக்க கேள்வி

கொழும்பு,மே 05

**புத்தாண்டு கொத்தணி என்பதன் மூலம் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு எதனைக் கூற விரும்புகின்றது? கொரோனா கொத்தணிகளுக்கு பெயர் குறிப்பிட்டு சுட்டிக்காட்டுவது மக்களை அறிவுறுத்துவதற்காகும். ஆனால், அரசாங்கம் தற்போது உருவாகியுள்ள கொத்தணியை விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்த தவறியுள்ளது. அதனால், தான் அடிப்படையின்றி புத்தாண்டு கொத்தணி என்று பெயர் குறிப்பிடப்படுகிறது என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.**



ஜே.வி.பி. தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் தற்போது அறிவிக்கப்படுகின்ற கொரோனா மரணங்களின் எண்ணிக்கையில் எமக்கு சந்தேகம் நிலவுகிறது. இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கமும் இதனைக் குறிப்பிட்டுள்ளது. அரசாங்கம் பி.சி.ஆர். பரிசோதனைகளை கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் மோசமானதொரு அரசியல் விளையாட்டை அரசாங்கம் விளையாடிக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதியும் அமைச்சரவை அமைச்சர்களும் பி.சி.ஆர். விவகாரங்களில் விளையாடிக் கொண்டிருக்கின்றனர். கொரோனாவை கட்டுப்படுத்தலுக்காக ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டு அதன் மூலம் சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், ஞாயிறுக்கிழமை தெஹியத்தகண்டி பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்கள் பாதுகாப்பற்ற முறையில் சிறிய ரக லொறியொன்றில் பயணிக்கும் புகைப்படம் சமூக வலைத்தளங்களிலும், இணைய தள பிரதான ஊடகங்களிலும் வெளியாகியுள்ளது. தொற்றாளர்களுக்கு ஆகக்குறைந்தது வான் ஒன்றைக் கூட ஏற்பாடு செய்து கொடுக்க முடியாத ஜனாதிபதி செயலணி என்ன செய்து கொண்டிருக்கிறது? இதன் மூலம் என்ன பயன்?

ஜனாதிபதி செயலணி ஒரு புறமிருக்க மறுபுறம் அமைச்சர்கள் மூவர் உட்பட விடயத்துக்குப் பொறுப்பான 6 அதிகாரிகள் உள்ளனர். இவர்கள் ஒவ்வொருவராலும் ஒவ்வொரு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இவற்றுக்கு புறம்பான வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இறுதியான ஒரு தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்க முடியாமையினால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

கொரோனா தொற்றால் ஏற்படுகின்ற மரணங்களின் எண்ணிக்கையை குறைப்பதற்காக வயதில் கூடிய முதியோருக்கும், அதன் பின்னர் முன்னிலையில் உள்ள சுகாதாரத் தரப்பினருக்கும் கொரோனா தடுப்பூசிகளை வழங்குமாறு உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அரசாங்கமும் அதனை மீறி கையிருப்பில் உள்ள தடுப்பூசிகளை திட்டமிடல் இன்றி சகலருக்கும் வழங்கியுள்ளது. இதனால் இரண்டாம் கட்டமாக தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டியவர்கள் அதற்குரிய காலம் கடந்தும் அதனைப் பெற்றுக்கொள்ள முடியாமலுள்ளனர்- என்றார். (எ)

# ஒரு லட்சத்து 17,000 பேருக்கு 2 ஆம் டோஸ் வழங்கப்பட்டது

கொழும்பு,மே 05

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிராக ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தற்போது தடுப்பூசியின் இரண்டாவது டோஸை பெற்றுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் ஒக்ஸ்போர்ட்-அஸ்ட்ராசெனேகா கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் பெற்ற நபர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 571 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் மாத்திரம் இரண்டாவது டோஸ் 23 ஆயிரத்து 135 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனவரி 29 ஆம் திகதி தேசிய கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை ஆரம்பித்து 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 பேர் கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் டோஸை ஏப்ரல் 15 ஆம் திகதி வரை பெற்றனர். கொவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தும் திட்டம் ஏப்ரல் 26 ஆம் திகதி ஆரம்பமானது.

இதேவேளை, இலங்கையில் 2,435 சீனப் பிரஜைகளுக்கு சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

# ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு இல்லை

மாத்தறை,மே 05

நாட்டில் ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக பரப்பப்படும் செய்தியை அரசாங்கம் முற்றாக நிராகரித்துள்ளது. இதில் எந்தவொரு உண்மைத் தன்மையும் இல்லை என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட கொரோனா செயலணிக் குழுக் கூட்டத்தில் பங்கேற்ற போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் ஒட்சிசன் வழங்கும் பிரதான நிறுவனங்கள் இரண்டின் பிரதானிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்தார்.

நாட்டிலுள்ள வைத்திய சாலைகளில் நாளாந்த ஒட்சிசன் தேவை 22 ஆயிரம் லீற்றர்களாகும். இவ்வாறான நிலையில் குறித்த நிறுவனங்கள் இரண்டும் நாளாந்தம் 67 ஆயிரம் லீற்றர் ஒட்சிசனை உற்பத்தி செய்வதாக அவர் சுட்டிக்காட்டினார். (எ)

# இணையத்தளங்களில் பிரபல்யப்படுத்தப்படும் மருந்து வகைகளை பயன்படுத்தவேண்டாம்

கொழும்பு,மே 05

இணையத்தளங்கள் மூலம் பிரபல்யப்படுத்தப்படும் கொரோனா வைரஸ் தொற்றுக்கான ஆயுள்வேத மற்றும் சுதேச மருந்து வகைகளைப் பயன்படுத்த வேண்டாம் என சுதேச வைத்திய மேம்பாட்டு கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலை மற்றும் சமுதாய சுகாதார இராஜாங்க அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அமைச்சின் செயலாளர் குமாரி வீரசேகர வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ்வாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்

## சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

ஏறாவூர், மே 05

பிரபாகரனின் படத்தை முகநூலில் நான் பதிவேற்றி பிரதமரை 'ரக்' செய்தால் பிரதமரை கைதுசெய்வீர்களா? என்று கேட்க விரும்புகின்றேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் மோகன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்பது மிகவும் ஒரு கேவலமான செயல்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இதற்கான காரணம் போலியான முகநூல் ஒன்றின் ஊடாக அவரது முகநூலில் ஒருடக் பதிவை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
உண்மையில் முகநூல் மூலமாக ஒருவர் தனது பதிவினை அவரது முகநூலில் பதிவேற்றி 'ரக்' செய்ததன் காரணமாக கைது செய்வது என்பது மிகவும் ஒரு கேவலமான விடயமாக தான் நான் பார்க்கின்றேன்.

இந்த அரசாங்கம் எவ்வளவோ பிரச்னை நடந்து கொண்டிருக்கின்றது. நாட்டிலே இடம்பெற்ற ஈஸ்டர் தாக்குதலில் சம்பந்தப்பட்ட சாரா என்றழைக்கப்படும் பெண்ணை கூட கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருக்கும் இலங்கை பொலிஸார், முகநூலில் ஒருவர் ஒருவருக்கு 'ரக்' செய்யப்பட்டதற்காக கைது செய்து விசாரிப்பது என்பது மிகவும் ஒரு கீழ்த்தரமான விடயம்.

இந்த அரசாங்கத்தின் இயலாமையை மறைப்பதற்காக செய்யும் ஒரு வேலைத்திட்டமாகத் தான் இதனை பார்க்க வேண்டியுள்ளது. நான் நாளைய தினம் பிரபாகரனுடைய படத்தை முகநூலில் போட்டு பிரதமரை 'ரக்' செய்தால் பிரதமரை கைது செய்வீர்களா? எனக் கேட்க விரும்புகின்றேன். உண்மையில் இது தமிழ் மக்களை அரசியல் ரீதியாக அடக்குகின்ற செயல்பாடாகவே நான் பார்க்கின்றேன். இந்த அரசாங்கம் உடனடியாக இவ்வாறான வேலைத்திட்டங்களை நிறுத்த வேண்டும்.

இன்று கொரோனா காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் அச்சத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த அரசாங்கம் தமிழர்களை அடக்க முயற்சி செய்யக் கூடாது என சொல்ல விரும்புகின்றேன். இதை வன்மையாகக் கண்டிப்பதுடன் அமைச்சருடனும் பேசவுள்ளேன்.

இவ்வாறு தொடருமானால் பல அமைப்புக்கள் உருவாகும். இந்த அரசுக்கு எதிராகப் போராடவும் தயாராக உள்ளோம். வடக்கு - கிழக்கு மட்டும் இல்லாமல் மலையகத்திலும் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மாவீரர் தினத்தில் கைது செய்தவர்களுக்கும் எந்தவித விசாரணையும் செய்யவில்லை. ஆகவே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டத்தில் தமிழர்களின் உரிமைக்காக குரல் கொடுத்த தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் மோகனை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றார். (எ)

# 70 கர்ப்பவதிகளுக்கு கொரோனா தொற்று

## போக்குவரத்துக்களை குறைக்க கோரிக்கை

கொழும்பு,மே 05

நாட்டில் இதுவரையில் சுமார் 70 கர்ப்பவதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. அத்தோடு பிறந்து ஒரு மாதமேயான குழந்தை உள்ளிட்ட ஒரு வயதுக்கும் குறைவான குழந்தைகளுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றன.

எனவே, கர்ப்பவதிகள் மற்றும் குழந்தைகள் மிக அவதானத்துடன் செயல்பட வேண்டும் என்று விசேட மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

இதுவரையில் சுமார் 70 கர்ப்பவதிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, கர்ப்பவதிகள் இயன்றவரை தமது போக்குவரத்துக்களை குறைத்துக்கொள்ள வேண்டும்.

பொது மக்கள் பெருமளவில் ஒன்று கூடும் இடங்களுக்குச் செல்ல வேண்டாம். கர்ப்பிணி தாய்மார் மாத்திரமின்றி பிறந்து ஒரு மாதமேயான குழந்தைகள் முதல் 3,5,7 மாத குழந்தைகளும் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வருகின்றன.

எனவே குழந்தைகள் உள்ள வீடுகளில் ஏதேனுமொரு தொற்று அறிகுறி உள்ள நபர்கள் இருப்பார்களாயின் எக்காரணத்தைக் கொண்டும் பிள்ளைகளை அவர்கள் அருகில் விட வேண்டாம். அத்தோடு குழந்தைகள் சிறுவர்களை அநாவசியமாக வீட்டிலிருந்து வெளியிடங்களுக்கு அனுப்புவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக் கொள்ளக் கூடிய வகையில் அவர்களுக்கான உணவுகள் வீடுகளிலேயே சமைத்து வழங்கப்பட வேண்டும். கடைகளில் தற்காலிகமாக தயாரிக்கப்படும் உணவுகளை வழங்குவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்- என்றார். (எ)

## நாட்டை முடக்க...

மூலமாக முழுமையாக கொரோனா வைரஸ் பரவலை எம்மால் கட்டுப்படுத்த முடியும். இந்த ஆண்டு இறுதிக்குள் 63 வீதமான மக்களுக்கு முழுமையாக தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கொரோனா தொற்று தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மேலும் கூறுகையில்,

தற்போதுள்ள நிலையில் நாளொன்றுக்கு 25 ஆயிரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்காக நாளொன்றுக்கு 4கோடி 40 இலட்சம் ரூபாய் செலவாகின்றது. இவ்வாறான நிலையில் நாட்டினை முடக்கி எவ்வாறு வருமானத்தை பெற்றுக்கொள்வது? எனவே நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் நாட்டினை முடக்க முடியாது. கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தடுப்பூசி ஏற்றுவதே எமது பிரதான வேலைத்திட்ட ம். தடுப்பூசிகளை ஏற்றுவதன் மூலமாக முழுமையாக வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியும். அதேபோல் மக்களை சுகாதார வழிமுறைகளுக்குள் வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதனால் இறப்பு வீதங்களை குறைக்க முடியும்.

925, 240பேருக்கு கோவிசீல்ட் தடுப்பூசிகள் முதல் கட்டமாக ஏற்றப்பட்டுள்ளன. இரண்டாம் கட்ட தடுப்பூசியை ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன . ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசியையும் இலங்கையில் பயன்படுத்த ஔடத கூட்டுத்தாபனம் அனுமதி வழங்கியுள்ளது. 13 மில்லியன் தடுப்பூசிகள் கட்டம் கட்டமாக வழங்கப்படும். அதேபோல் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் 8.4 மில்லியன் அஸ்ட்ரா ஸெனசா தடுப்பூசிகளும், அமெரிக்காவின் உற்பத்தியான பைசர் தடுப்பூசிகள் 5 மில்லியனும், சீன உற்பத்தியான சினோபார்ம் தடுப்பூசிகளும் ஆறு இலட்சமளவில் தற்போது எம்மிடம் உள்ளன.

சீனாவின் தடுப்பூசிக்கு அனுமதி கிடைத்தவுடன் மேலதிகமாக சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்கவும் சீன அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. எனவே இந்த ஆண்டு இறுதிக்குள் 63 வீதமான மக்களுக்கு முழுமையாக தடுப்பூசிகளை ஏற்றும் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே தடுப்பூசி நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை செய்துள்ளோம். ஆகவே, உலகில் அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டத்திற்கு நிகராக இலங்கையும் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது என்றார்.

## 75 இலட்சம்...

இலங்கையில் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் சீன தடுப்பூசிக்கான அனுமதி கிடைத்தவுடன் அதனை மக்களுக்கு ஏற்றும் நடவடிக்கை ஆரம்பமாகுமென இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கொரோனா தொற்று தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத்தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

இன்றும் உலகில் 50 நாடுகள் ஒரு தடுப்பூசியை கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளன. ஆனால் நாம் இப்போது வரையில் 9 இலட்சத்திற்கும் அதிகமான தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்கியுள்ளோம். இந்தியாவின் தடுப்பூசிகள் ஆரம்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டன. உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூலமாகவும் எமக்கு இலவசமாக தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. அதேபோல் சீனாவின் சினோபார்ம் தடுப்பூசிகளும் நாட்டில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. ஆறு இலட்சம் தடுப்பூசிகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் அவற்றில் மூவாயிரம் தடுப்பூசிகள் இதுவரை சீனர்களுக்கு ஏற்றப்பட்டுள்ளன. எஞ்சிய 597,000 தடுப்பூசிகள் கைவசம் உள்ளன. தடுப்பூசிகளை பயன்படுத்த முடியும் என்ற அனுமதி கிடைத்தவுடன் அவற்றை நாம் பயன்படுத்த முடியும்.

இன்று காலையில் (நேற்று) ரஷ்யாவின் ஸ்புட்னிக் தடுப்பூசிகள் கிடைத்தன. அடுத்த வாரமும், மே இறுதியிலும், ஜூன், அக்டோபர் மாதங்களில் ஏனைய தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டு வரும் உடன்படிக்கை ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்டுள்ளன. 7 அல்லது ஏழரை மில்லியன் ஸ்புட்னிக் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள நிலையில் இலங்கையில் 14 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசிகளை ஏற்ற வேண்டிய தேவை உள்ளது. அதற்கான வாய்ப்புகள் உள்ளன. சர்வதேச நாடுகளில் ஒத்துழைப்புடன் எம்மால் நிலைமைகளை சமாளிக்க முடியும் என்றார்.

## கொடிகாமம்...

இதனிடையே, கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி ஆகிய கிராம சேவகர் பகுதிகள் நேற்றிரவு முதல் முடக்கப்பட்டன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

கொடிகாமம் சந்தை மற்றும் அதன் நகர்புற வியாபார நிலையங்களில் கடந்த 28ஆம் திகதி எழுமாற்றாக பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இதில் சந்தை வியாபாரிகள் இருவரும், நகர் புற வர்த்தகர்கள் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் ஐவர் தொற்றாளர்களாக உறுதிப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் 154 பேருக்கு பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டன. இவை நேற்று யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் பரிசோதிக்கப்பட்டன. இதிலேயே 21 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்கள் கொடிகாமம், வரணி, எழுதுமட்டுவாழ், பாலவி, உசன், மிருசுவில், இத்தாவில், கச்சாய், நாவற்குழி, மீசாலை பகுதிகளை சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது.

இவ்வாறு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்களில் அதிகமானோர் கொடிகாமம் சந்தை தொகுதி வியாபாரிகளாவர். இதனால் கொடிகாமம் சந்தைத் தொகுதி தொடர்ந்தும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டிருக்கும் என்று சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட கொடிகாமம் வடக்கு, கொடிகாமம் மத்தி ஆகிய கிராம சேவகர் பகுதிகள் நேற்றிவு முதல் முடக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டவர்கள் வேறு பகுதிகளுக்கு செல்வதோ அல்லது வேறு பகுதியினர் இந்தப் பகுதிகளுக்கு நுழைவதோ தடை செய்யப்பட்டுள்ளது என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (ஐ -3)

## நாட்டை முடக்கு...

மேலும், “கோவிட் - 19 தடுப்புக்கான தேசிய செயலணி மற்றும் சுகாதார அதிகாரிகளுடன் திங்கட்கிழமை சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இதில், நாட்டை முடக்குவதன் அவசியம் குறித்து பேசப்பட்டது.

“எது எப்படி இருப்பினும் தொற்று பரவுதலைக் குறைக்க தற்போதைக்கு பகுதி அளவிலான முடக்கங்களே போதுமானது என்பதே அரசாங்கத்தின் நிலைப் பாடு. ஆனால், எதிர்காலத்தில் நாட்டின் நிலைமையை பொறுத்து முடிவு மாறக் கூடும்.

“அண்மையில், கோவிட் - 19 பாதிப்பால் கடும் நெருக்கடியை எதிர்கொள்ளும் இந்தியாவைப் போல இலங்கையில் நேராது. இலங்கை மக்கள் விவேகமானவர்கள். அவர்கள் வைரஸ் மேலும் பரவாமல் தடுக்க பொறுப்பான - விவேகமான முறையில் செயல்படுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் - என்றும் அவர் சொன்னார். (ஐ)

## 11 இந்திய...

மேற்கொண்டுள்ள நிலையில், இலங்கை கடலுக்குள் நுழைய முயச்சித்த 86 நபர்களுடன் வந்த 11 இந்திய மீன்பிடிக் படகுகள் இலங்கை கடற்படையால் நேற்று தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

சட்டவிரோத குடியேறியவர்கள் கடல் வழியாக இலங்கைக்கு நுழைவதால் நாட்டில் கோவிட் 19 தொற்று நோய் பரவும் ஆபத்து ஏற்பட்டுள்ளதால், 24 மணி நேர ரோந்துப் பணிகளை அதிகரிப்பதன் மூலம் வடமேற்கு மற்றும் வடக்கு கடல் பகுதிகளில் கடற்படை பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், மன்னாருக்கு தெற்கு கடல் பகுதியில் கடற்படை மேற்கொண்ட ரோந்துப் நடவடிக்கையின் போது, இலங்கை கடல் பகுதிக்குள் நுழைய முயன்ற 11 இந்திய மீன்பிடிக் படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் இந்திய கடலோர காவல் படைக்கு தகவல் அளிக்கப்பட்டு 11 இந்திய மீன்பிடிக் படகுகளையும் 86 நபர்களையும் இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## சாவகச்சேரி...

லும் யாழ்ப்பாணம் மாவட்ட நிலையிலும் முதலிடம் பெற்று வரலாற்றுப் பதிவு செய்துள்ளார்.

2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன. இதனடிப்படையில் ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 297 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெறத்தகுதி பெற்றுள்ளனர்.

இதன்படி, புதிய பாடத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 337 மாணவர்களும், பழைய பாடத்திட்டத்தின் கீழ் 15 ஆயிரத்து 960 மாணவர்களும் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-03)

## இரண்டாம்...

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற கொரோனா தொற்று தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே மேலும் கூறுகையில்,

உலகளாவிய ரீதியில் கொரோனா தொற்று கடந்த சில வாரங்களாக அதிகரித்திருக்கின்றது. இந்த தொற்று நிலை அடிக்கடி மாற்றமடையும் தன்மை கொண்டது. அதனால் திடீரென தொற்றாளர்கள் அதிகரிக்கலாம். மரணங்கள் அதிகரிக்கலாம். அதனால் அதற்கு ஏற்றவகையில் நாங்கள் முகம்கொடுத்து இதனை கட்டுப்படுத்தவேண்டும். எதிர்க்கட்சி கூறுவது போல் இது அரசின் தவறால் ஏற்பட்டதல்ல.

மேலும், பி.சி .ஆர். பரிசோதனைகளை அரசு திட்டமிட்டு குறைக்கவில்லை. கடந்த சில மாதங்களாக கொரோனா தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்படும் வீதம் குறைவாக இருந்தது. அதனால் பி.சி .ஆர் பரிசோதனைகளும் குறைவடைந்தன. இது சாதாரணமாக இடம் பெறுவதாகும். ஆனால், தற்போது கடந்த மாதம் 12ஆம் திகதிக்கு பின்னர் பி.சி . ஆர். பரிசோதனைகளை அதிகரித்திருக்கின்றோம். வெறுமனே பி.சி .ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டு மாத்திரம் இதனை கட்டுப்படுத்த முடியாது. அதனால் மக்கள் தேவையற்ற நடமாட்டங்களை தவிர்ந்துகொண்டு, கொரோனா தொடர்பான சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை பின்பற்றி செயல்பட்டால் இதனை கட்டுப்படுத்த முடியும்.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட அஸ்ட்ரா ஸெனசா தடுப்பூசி முதலாம் கட்டம் ஏற்றியவர்களுக்கு அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசியை ஏற்றுவதற்கு மேலும் 6இலட்சம் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன . 6இலட்சம் தடுப்பூசிகளுக்கு தட்டுப்பாடு இருப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அதனை மறைப்பதற்கு ஒன்றுமில்லை. அரசாங்கத்தின் தவறால் அது இடம் பெற்றதொன்று அல்ல. எதிர்பார்க்காத வகையில் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் அசாதாரண நிலைமையால், எமக்கு தேவையான தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே அஸ்ட்ரா ஸெனசா முதலாவது கட்ட தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களுக்கு அதன் இரண்டாம் கட்ட தடுப்பூசியை ஏனைய தடுப்பூசியுடன் கலந்து வழங்க முடியுமா என்ற பரிசோதனை இடம்பெற்று வருகின்றது என்றார்.

## 64 வீத...

விக்கப்பட்டுள்ளது.

இம்முறை பரீட்சைக்காக 3 இலட்சத்து 62 ஆயிரத்து 824 பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதனடிப்படையில் அவர்களுள் ஒரு இலட்சத்து 94 ஆயிரத்து 297 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)

## சட்டத்தின்...

அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கை தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபை அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

மக்களின் கருத்துச் சுதந்திரத்தை, குறிப்பாக ஊடகங்களின் கருத்துச் சுதந்திரத்தை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று அப்பதிவில் சுட்டிக் காட்டியிருக்கும் மன்னிப்புச்சபை, ஊடகத்துறையில் பணியாற்றுவோருக்கான பாதுகாப்பான சூழலை உறுதிசெய்வதன் மூலம் அவர்கள் எவ்வித அச்சமும், இழப்புமின்றி உண்மையான செய்திகளை அல்லது தகவல்களை வெளியிடுவதற்கு அல்லது பேசுவதற்கு இடமளிக்க முடியும் என்றும் தெரிவித்துள்ளது.

மேலும், அண்மைய வருடங்களில் தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வரும் ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் மிகவும் கவலைக்குரியவையாகும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீதான அடக்குமுறைகள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் எவ்வித பக்கச் சார்புமின்றி முழுமையாக விசாரணை மேற்கொள்வதுடன், அவற்றுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும் மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது. (எ)

## கொரோனா...

தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் இன்று கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் மீதான விவாதத்தை முன்னெடுக்காதிருப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதற்குப் பதிலாக நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்ட ‘நாட்டில் நிலவும் கொரோனா சூழ்நிலை’ குறித்த சபை ஒத்திவைப்பு விவாதத்தை இன்று புதன்கிழமையும் முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணிவரை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் குறித்த உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இதுவரை சபாநாயகருக்குக் கிடைக்காத காரணத்தால் இன்று இந்த சட்டமூலம் குறித்த விவாதத்தை நடத்தாதிருக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு கிடைத்த பின்னர் அடுத்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் குறித்த சட்டமூலத்தை விவாதத்துக்கு எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம், இன்று சபை ஒத்திவைப்பு விவாதத்தை மதியபோசன இடைவேளைக்காக இடைநிறுத்தாமல் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கும் இணக்கம் காணப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

ஈழநாடு
Eelanadu

# வடக்கில் நேற்று 44 தொற்றாளர்!

## யாழில் 38 பேர் அடையாளம்

யாழ்ப்பாணம், மே 05


**வடக்கு மாகாணத்தில் நேற்று 44 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். இதில், 38 பேர் யாழ்ப்பாணம், தலா 3 பேர் கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.**

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆய்வுகூடங்களின் பரிசோதனை முடிவுகளிலேயே இந்த விவரம் வெளியானது.

யாழ்ப்பாணத்தில், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 21 பேர் (கொடிகாமம் சந்தை கொத்தணி), யாழ். சிறைச்சாலையில் 8 பேர், யாழ். போதனா வைத்திசயாலையில் தனிமைப்படுத்தலில் இருந்த 6 பேர், உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேர் என 38 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேபோன்று, கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்த ஒருவருக்கும், தனிமைப்படுத்தலில் இருந்த இருவருக்குமாக மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவரும், பூவரங்குளம் வைத்தியசாலையை சேர்ந்த இருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)

# நேற்றைய தினம் 1,914 பேருக்கு தொற்று



கொழும்பு, மே 05

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர் களின் எண்ணிக்கை கட்டுக்கடங்காமல் அசுர வேகத் தில் அதிகரித்துள் ளது. நேற்று 1,914 பேர் தொற் றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்டவர்களில் வெளி நாடுகளிலிருந்து திரும்பிய 54 பேரும் உள்ளடங்குவார்கள்.

இதன்படி நாட்டில் தொடர்ந்து ஆறாவது நாளாகவும் கொரோனாத் தொற்றாளர் களின் எண்ணிக்கை 1500 ஐ கடந்துள்ளது. கடந்த 6 நாள் களில் 10 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

### உயிரியல் பிரிவில்:

## மீசாலை வீரசிங்கம் மத்தி. மாணவி யாழ். மாவட்டத்தில் முதலிடம்!

யாழ்ப்பாணம், மே 05

யாழ்ப்பாணம் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவி கனகேஸ்வரன் கவினா உயிரியல் பிரிவில் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

உயிரியல் விஞ்ஞான பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்ற அவர் 2.8677 இசட் புள்ளிகளைப் பெற்று தேசிய மட்டத்தில் 17ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதேவேளை, இந்த மாணவி, முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரனின் இரண்டாவது புதல்வி என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### வர்த்தக பிரிவில்

## புனித திரேசா மாணவி கிளிநொச்சியில் முதலிடம்



கிளிநொச்சி, மே 03

ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் புனித திரேசா மகளிர் கல்லூரி மாணவி மகேந்திரன் தர்சிகா 3 பாடங்களிலும் 'ஏ' சித்தி பெற்று சாதனை படைத்துள்ளார்.

இவர் பரந்தன் கோரக்கன்கட்டு கிராமத்தை சேர்ந்தவர். இவர் படிக்கும் பாடசாலையிலிருந்து கோரக்கன்கட்டுக் கிராமம் 7 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஐ.பி.எல். தொடர் இடைநிறுத்தம்!




புதுடில்லி, மே 05

ஐ.பி.எல். தொடர் தற்காலிகமாக இடைநிறுத்தப்படுவதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை அறிவித்துள்து.

கொரோனா தொற்று அச்சுறுத்தலுக்கு மத்தியி லும் இந்தியாவில் நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டி ஆரம்பமானது. தொற்று அபாயம் காரண மாக போட்டிக்கு பார்வையாளர்கள் அனுமதிக்கப் படவில்லை. வீரர்களுக்கும் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

தொடர் ஆரம்பமான பின்னர், இந்தியாவில் 2ஆம் அலையின் தாக்கம் உச்சளவை எட்டியது. இதைத் தொடர்ந்து வீரர்கள் பலரும் தொடரிலிருந்து விலகினர். எனினும் பாதுகாப்புடன் தொடரை தொடர்ந்தும் நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முயன்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் கொல்கத்தா நைற் ரைடர்ஸின் வீரர்களான வருண் சக்கரவர்த்தி, சந்தீப் வாரியர் ஆகியோருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து நேற்று முன்தினம் நடக்கவிருந்த போட்டி ஒத்தி வைக்கப்பட்டது.

இதேபோன்று, சென்னை சுப்பர் கிங்ஸின் பந்து வீச்சு பயிற்றுவிப்பாளர் எல். பாலாஜி, பேருந்து பராமரிப்பாளருக்கும் தொற்று உறுதியானது. ஹைதராபாத் அணியின் விக்கெட் காப்பாளர் சஹாவும் தொற்றாளராக இனங்காணப்பட்டார்.

இதனால், சென்னையின் சகல வீரர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். இதையடுத்தே தொடரை ஒத்திவைக்க இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை முடிவெடுத்தது.

இதனிடையே, வெளிநாட்டு வீரர்களை பாதுகாப்பாக அவர்களின் நாடுகளுக்கு அனுப்பி வைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஐ)

### கணிதப் பிரிவில்

## புது. மத்திய கல்லூரி மாணவி முல்லைத்தீவில் முதலிடம்



முல்லைத்தீவு, மே 05

நேற்று வெளியான ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கணிதப் பிரிவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறுமுகம் சுபவர்சனா முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவியான இவர் அகில இலங்கை ரீதியில் 71ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.


# மரண அறிவித்தல்

பிறப்பு ✣ 08 ✣ 05 ✣ 1959

இறப்பு ✣ 04 ✣ 05 ✣ 2021



## திரு. நாராயணன் ஆச்சாரி நாகராஜா

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு கொச்சிக்கடையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு.நாராயணன் ஆச்சாரி நாகராஜா அவர்கள் 04.05.2021 செவ்வாய்க்கிழமையன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற நாராயணன் ஆச்சாரி மற்றும் இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வெள்ளவத்தை கந்தசாமி ஆச்சாரி மற்றும் காந்திமதி தம்பதியரின் அன்பு மருமகனும் சித்திரலேகா அவர்களின் அன்புக் கணவரும் அஷ்வினா. யஷ்வந்த் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள் பிரகாஷ் அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து 05.05.2021 இன்று புதன்கிழமை காலை 9.30 - 10.30 மணிக்கு மாதம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை ஆழ்ந்த துயரத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இவ் அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு :**
**இல.190 2/1, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.**
**0774722338 (யஷ்வந்த்), 0774845463 (அருள் பிரகாஷ்)**


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.05.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.